ஹரி ஸர்வோத்தம | வாயு ஜீவோத்தம ||



**ஸ்ரீவ்யாஸ விட்டலர் அருளிய ஸ்ரீவிஜயராயர கவசம் (தமிழில் அர்த்த விளக்கங்களுடன்)**

இந்த புத்தகத்தை வெளியிட
பொருளுதவி செய்து உதவிய
ஸ்ரீகுருராஜரின் பாதமே கதி என்று வாழும்

ஸ்ரீ K. ஸ்ரீதர் ஸ்ரீமதி. லதா ஸ்ரீதர்
ஸ்ரீ S.குருப்ரஸாத் க்ருஷ்ணா, ஸ்ரீமதி. ஐஸ்வர்யா
G.மாதங்கிஸ்ரீ (பேத்தி), ப்ரஹ்லாதன் (பேரன்)
ஸ்ரீமதி. ஐஸ்வர்யா ஸ்ரீகாந்த் (மகள்), ஸ்ரீ. V.ஸ்ரீகாந்த் (மருமகன்)
ஸ்ரீ S.ரகுநாத் (பேரன்)

**ஸ்ரீராகவேந்த்ரா டூர்ஸ்**
310, சலிவன் வீதி, ராகவேந்த்ரா கோயில் எதிரில்,
கோவை : 641 001
Cell No. 99526 71118, 99436 71118, 94433 42404 95664 30460
Office: 0422-234284, 95664 30656
Web: Sriragavendratours.com
Email: Sriragavendratours.com@gmail.com

|| ஓம் ஸ்ரீ லக்ஷ்மி வெங்கடேஶ ப்ரஸன்ன ||

ஹரி ஸர்வோத்தம | வாயு ஜீவோத்தம ||

ஸ்ரீவ்யாஸ விட்டலர் அருளிய

# ஸ்ரீவிஜயராயர கவசம்

(தமிழில் அர்த்த விளக்கங்களுடன்)



**ஸ்ரீவிஜயதாஸர்**

வெளியிடுவோர்:
ஸ்ரீஹயவதன சேவா ஸமிதி
அக்ரஹாரம், சிங்காநல்லூர்
கோயமுத்தூர் : 641005
அலைபேசி எண்: 98420 38404

|| ஓம் ஸ்ரீ லக்ஷ்மி வெங்கடேஶ ப்ரஸன்ன ||
ஹரி ஸர்வோத்தம | வாயு ஜீவோத்தம ||

## ஸ்ரீவ்யாஸ விட்டலர் அருளிய
# ஸ்ரீவிஜய ராயர கவசம்
## (தமிழில் அர்த்த விளக்கங்களுடன்)

**வெளியிடுவோர்:**
**ஸ்ரீஹயவதன சேவா ஸமிதி**
**அக்ரஹாரம், சிங்காநல்லூர்**
**கோயமுத்தூர் : 641005**
**அலைபேசி எண்: 98420 38404**

**ஸ்ரீவ்யாஸ விட்டலர் அருளிய**
**ஸ்ரீவிஜய ராயர கவசம்**
**(தமிழில் அர்த்த விளக்கங்களுடன்)**

ஸ்ரீஹரிவாயுகுருகளின் ஆசியுடன், விஸ்வாவஸு பால்குண பகுள சதுர்த்தி, ஸ்ரீவ்யாஸராஜரின் ஆராதனை நாளான 07.03.2026 அன்று இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டது.

**தமிழில் உரை எழுதியவர்:**
‘ஜகன்னாத கேசவ’ சத்ய நாராயணன்
பெங்களூரு
8904458276

| |
|---|
| **இந்தப் புத்தகத்தை வெளியிட பொருளுதவி செய்த கோவை ஸ்ரீராகவேந்த்ரா டூர்ஸ், திரு. K.ஸ்ரீதர் அவர்களுக்கு நம் மனமார்ந்த நன்றிகள்.** |

|| ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து ||

## பொருளடக்கம்

| # | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 3 |
| 2 | ஸ்ரீவிஜயராயர கவசம் - மூலம் மட்டும் பாராயணத்திற்காக | 6 |
| 3 | ஸ்ரீவிஜயராயர கவசம் - சுருக்கமான அர்த்தம் | 8 |
| 4 | ஸ்ரீவிஜயராயர கவசம் - விரிவான விளக்கங்கள் | 13 |
| 5 | ஸ்ரீவிஜயதாஸர மஹிமெ ஸுளாதி | 63 |

# முன்னுரை

ஸ்ரீவிஜயதாஸர் (1682-1755)
அக்ஞான திமிரச்சேதம் புத்தி ஸம்பத் பிரதாயகம் |
விக்ஞானம் விமலம் ஶாந்தம் விஜயாக்ய குரும்பஜே ||

நம்முடைய அக்ஞானம் என்னும் இருளை விலகச் செய்பவரும், நமக்கு நற்புத்தியை / யதார்த்த க்ஞானத்தை அளிப்பவருமான, விஸேஷ க்ஞானத்தைக் கொண்டவரான, தோஷங்கள் அற்றவரான, அமைதியான ஸ்வரூபத்தைக் கொண்டவரான ஸ்ரீவிஜயதாஸர் என்னும் குருகளை நாம் வணங்குவோம்.

விஜயராயர பாத நிஜவாகி நம்பலு
அஜனபித தானெ ஒலிவ
த்விஜகேதனன குணவ வ்ரஜவ கொண்டாடுவ
ஸுஜன மந்தாரனீத

வி எந்து நுடியலு விஷய லம்படதூர
ஜ எந்து நுடியலு ஜனன ஹானி
ய எந்து கொண்டாடெ யமபடரு ஓடுவரு
ராய எந்தேனலு ஹரிகாய்வ வரவீவ ||

விஜயப்ரபு பாதயுகள வனஜ பஜிஸுவெ
விஜயஸகன தோரிரெந்து நிஜதி பேடுவெ |
அஜருத்ரதேவரிகிந்த கஜவரதனே
நிஜதி ஸ்ரேஷ்டதமனெந்து ஈ ஜகக்கெ ஸாரிதெ

ஹுக்கியனித்த சாகிராயகெ கருணெ தோரிஸிதெ
பக்கி பேடித ஸ்த்ரீயள மனெலி போஜன மாடிதெ
ஹிக்கிலி மங்களாங்க ஹரிவிட்டலன ஒலிஸிதெ
பக்கி பக்கி விஜயவிட்டலகெ மனதி நமிஸிதெ ||

ஸ்ரீவ்யாஸ விட்டலதாஸரான ஸ்ரீகல்லூர் ஸுப்பண்ணாசார்யர் இயற்றிய ஸ்ரீவிஜய ராயர கவச - மாத்வர்கள் தினமும் பாராயணம் செய்ய வேண்டிய பத்யங்களில் மிகவும் முக்கியமானதும், அவசியம் அனைவரும் அறிந்திருக்க வேண்டியதான பத்யமும் ஆகும். ஸ்ரீவிஜயதாஸரின் மகிமைகளை, அற்புதங்களை, அவரது ஆளுமையை நேரடியாகக் கண்டு, அனுபவித்த மஹானுபாவர் ஸ்ரீஸுப்பண்ணாசார்யர். அத்தகைய ஆளுமையைப் பற்றி, நாம் அனைவரும் அறிய வேண்டும், ஸ்ரீதாஸரின் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்னும் நல்லெண்ணத்தில் இத்தகைய அரிய பொக்கிஷமான க்ருதியை நமக்கு இயற்றிக் கொடுத்திருக்கிறார். இதனை தக்க அர்த்த அனுஸந்தானத்துடன் படித்து, ஸ்ரீவிஜயதாஸரின் அருளையும், அவரின் அந்தர்யாமியான ஸ்ரீவிஜயவிட்டலனின் ப்ரஸாதத்தையும் பெறுவோமாக.

விஜய ராயர கவச. கவச என்றால் ரக்ஷக. காப்பாற்றுபவர் / காப்பாற்றுவது என்று பொருள். ஸ்ரீவிஜயராயரின் கவசம் நம்மை காப்பாற்றுகிறது. அருள்கிறது. ஸ்ரீவிஜயராயரே நமது கவசம். நம் அனைத்து துக்க நிவர்த்திக்கும், இஷ்ட ப்ராப்திக்கும் அவரையே சரணடைய வேண்டும்

என்பதையே ஸ்ரீஸுப்பண்ணாசார்யர், அத்தகைய குருகளை எப்போதும் நினைத்திருப்பதற்காக, தினமும் பாராயணம் செய்வதற்காக, நமக்கு இத்தகைய கவசத்தை இயற்றிக் கொடுத்திருக்கிறார்.

நம் குருவான ஸ்ரீஹரிப்ரிய தீர்த்தர் (முன்னர்: ஸ்ரீஜாம்பவதிப்ரிய விட்டல தாஸர் / ஹரதி ப்ரஹ்லாதாசார்யர்) அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் எனக்கு பாடம் எடுத்த வகையில், இணையத்தில் இருக்கும் சில உபன்யாஸங்கள் கேட்டும், வேறு கட்டுரைகள் இவற்றின் உதவியுடனும், ஸ்ரீஹரிவாயு குருகளின் அருளால் யதாமதி இந்தப் புத்தகத்தின் அர்த்தங்களை, விளக்கங்களை எழுதியுள்ளேன். ஒவ்வொரு வரிகளுக்கும் இன்னும் அதிகமான ஆதார ப்ரமாணங்களைக் கொடுத்துக் கொண்டே போகலாம் என்றாலும், 1-2 விளக்கங்களுடன் நிறுத்தியிருக்கிறேன்.

இந்த கவசத்தில் இருக்கும் பல வரிகளில் பாட-பேதம் இருக்கலாம். மேலும், சில வரிகளில் ஹளெ-கன்னட, ஹொஸ-கன்னட (புதிய / பழைய கன்னடம்) என இரு வகை பேதங்களினாலும் சில குழப்பங்கள் வரலாம். ‘சிந்தே பேடிரோ’ (சிந்தனையை கேளுங்கள்) என்று சிலரும் ‘சிந்தே ப்யாடிரோ’ (கவலைப்படாதீர்கள்) என்று வேறு பலரும் பாடுகின்றனர். இந்த இரண்டையும் குறிப்பிட்டு அர்த்தம் எழுதப்பட்டுள்ளது.

இந்தப் புத்தகம் மூன்று பகுதிகளாக இருக்கின்றன.
1. ஸ்ரீவிஜயராயர கவசம் - மூலம் மட்டும் - பாராயணத்திற்காக.
2. சுருக்கமான அர்த்தம் மட்டும்
3. நீண்ட விளக்கங்களுடன் கூடியது.

இந்தப் புத்தகத்தின் draftஐ முழுவதுமாக படித்து, பிழை திருத்த உதவிய திரு.முரளிதரன், கோவை (அழைபேசி எண் #95002 88035) அவர்களுக்கு எனது அனந்த நன்றிகள்.

குர்வந்தர்கத பாரதிரமண முக்யப்ராணாந்தர்கத ஸ்ரீஜகன்னாத கேசவ ப்ரியதாம். ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

சத்ய நாராயணன்
பெங்களூரு
8904458276

17.02.2026

# SRI VIJAYA DASARU

- Amsha – Sri Brugu Rushigalu
- Birth Place – Cheekalaparvi, Manvi Taluk in Raichur District
- Parents – Srinivasappa & Koosamma
- Period – 1682 – 1755
- Birth Name – Dasappa (He was popularly called as Koosi maga daasappa)
- Gotra – Bharadhwaja
- His Niryaana place – Chippagiri (Bhaskara kshetra)
- (A Mandal in Kurnool District, Andrapradesh. It is twenty km from Alur and 7 km from Guntkal Railway station/bus stand)
- Previous Avatharas –
  In Kruta yuga - brugu rishi
  In Treta yuga - Sura leela (monkey)
  In Dwapara yuga - Nikamba yadhava in Gokulam & Jara named Hunter
  In Kali yuga - a Calf in Sri Purandaradasa's house & Madhwapati (Sri Purandaradasa's son
- Brothers – Hayavadana Vittaladasaru, Ananda Dasaru
- Upanayana – 1690 AD
- Marriage in 1698 with Aralamma
- Children – 1 male child Sheshagiri
- **Adopted son** – Mohana (He found in Hampi. At that time the child was suffering severe desease, saved him and adopted that child and gave the name Mohana, who became Mohana Dasa subsequently
- Ankita – Vijaya Vittala by Purandaradasaru in Gaya (swapna labda) @ Kashi Mani karnika Ghat
- He did the pratistapane of Sri Venugopalakrishna in Chippagiri (popularly called as Bhaskara kshetra)
- He also did the pratistapane of Mukyaprana devaru which was found in a well at Chippagiri.
- Punyadina – 13.11.1755 – Yuva Samvatsara Karthika Shudda Dashami @ Chippagiri
- He got the anugraha of Sri Satyabodha Tirtharu in his 72nd year

## ஸ்ரீவ்யாஸவிட்டல தாஸர்
## (ஸ்ரீகல்லூர் ஸுப்பண்ணாசார்யர்) இயற்றிய
## ஸ்ரீவிஜயராயர கவசம்
## (மூலம் மட்டும் - பாராயணத்திற்காக)

ஸ்மரிஸி ப3துகிரோ தி3வ்ய சரணகெரகி3ரோ
து3ரித தரிது3 பொரெவ விஜய கு3ருக3ளெம்ப3ர ||ப||

தா3ஸ ராயனா த3யவ ஸூஸி படெ3த3னா
தோ3ஷ ரஹிதனா ஸந்தோஷ ப4ரிதனா ||1||

க்ஞான வந்தனா ப3லு நிதா4னி ஶாந்தனா
மான வந்தனா ப3ஹுவ தா3ன்ய தா3ந்தன ||2||

ஹரிய ப4ஜிஸுவா நரஹரிய யஜிஸுவா
து3ரித த்யஜிஸுவா ஜனகெ ஹருஷ ஸுரிஸுவா ||3||

மோத3 ப4ரிதனா பஞ்சபே4த3 வரிதனா
ஸாது4 சரிதனா மனவிஷாத3 மரெதனா ||4||

இவர நம்பி3தா3 ஜனகெ ப4வவிதெ3ம்புதூ3
ஹவணவாக3தோ3 நம்மவர மதவிது3 ||5||

பாப கோடிய ராஶி லேபவாக3தோ3
தாப களெவனோ ப3லு த3யா பயோநிதி4 ||6||

கவனரூபதீ3 ஹரிய ஸ்தவன மாடி3தா3
பு4வன பே3டி3தா3 மாத4வன நோடி3தா3 ||7||

ரங்க3னெந்த3னா ப4வவு ஹிங்கி3தெந்த3னா
மங்க3ளாங்க3னா அந்தரங்க3வரிதனா ||8||

காஶி நக3ரத3ல்லித்3த3 வ்யாஸ தே3வனா த3யவ
ஸூஸி படெ3த3னா உல்லாஸ தனத3லீ ||9||
சிந்தெ ப்3யாடி3ரோ நிஶ்சிந்தராகி3ரோ
ஶாந்த கு3ருக3ளா பாத3வாந்து1 நம்பி3ரோ ||10||

கே2த3வாக3தோ3 நிமகெ3 மோத3வாஹுதோ3
ஆதி3தே3வன ஸுப்ரஸாத3வாஹுதோ3 ||11||

தாப தடெ3வனோ ப3ந்த3பாப கடி3வனோ
ஸ்ரீபதிய பாத3 த3 ஸமீப விடு3வனோ ||12||

க3ங்கெ3 மிந்த3ரெ மலவு ஹிங்கிதல்லதே3
ரங்க3 னொலியனோ ப4க்த ஸங்க3 தொ3ரெயதே3 ||13||

வேத3 ஓத3லூ ப3ரிதெ3 வாத3மாட3லூ
ஹாதி3யாக3தூ3 பு3த்3ர பாத3 நம்ப3தே3 ||14||

லெக்கவில்லதா3 தே3ஶ து1க்கி ப3ந்த3ரூ
து3:க2வல்லதே3 லேஶ ப4க்தி தொ3ரெயதோ3 ||15||

தா3னமாட3லூ தி3வ்ய கா3ன பாட3லூ
க்ஞான தொ3ரெயதோ3 இவர அதீ4னவாக3தே3 ||16||

நிஷ்டெயாதகே^ கண்ட3 கஷ்டவ்யாதகே
தி3ட்ட கு3ருக3ளா பாத3 முட்டி ப4ஜிஸிரோ ||17||

பூஜெ மாட3லூ கண்ட3 கோ3ஜு பீ3ளலு
பீ3ஜமாதினா ப2ல ஸஹஜ தொ3ரெயது ||18||

ஸுரரு எல்லரு இவர கரவ பிடி3வரோ
தரள ரந்த3தீ3 ஹிந்தெ3 திருகு3திப்பரோ ||19||

க்3ரஹக3ளெல்லவூ இவர்கெ3 ஸஹாய மாடு3தா
அஹோ ராத்ரிலீ ஸுக2த3 நிஹவ கொடுவவோ ||20||

வ்யாதி3 பா3ரதோ3 தே3ஹ பா3தெ4 தட்டதொ3
ஆதி3தே3வன ஸுப்ரஸாத3வாஹுதோ3 ||21||

பதித பாமரா மந்த3மதியு நா ப3லூ
துதிஸலாபெனெ இவர அதிஶயங்க3ளா ||22||

கருணதி3ந்த3லீ எம்ம பொரெவனல்லதே3
து3ரித கோடியா பே3க3 தரிவ த3யத3லீ ||23||

மந்த3மதிக3ளூ இவர செந்த3வரியதே3
நிந்தெ3மாட3லூ ப4வத3 ப4ந்த3 தப்பதோ3 ||24||

இந்தி3ராபதீ இவர முந்தெ3 குணிவனோ
அந்த3வசனவா நிஜகெ தந்து3 கொடு3வனோ ||25||

உத3ய காலதீ3 ஈ பத3வ படிஸலூ
மத3ட3னாத3ரூ க்ஞான உத3யவாகு3தோ3 ||26||

ஸடெ1 இத3ல்லவோ வ்யாஸவிட்2ட2ல ப3ல்லனோ
படிஸ பஹுதி3தொ3 கேளி குடில ரஹிதரு ||27||

***

## ஸ்ரீவ்யாஸவிட்டல தாஸர்
## (ஸ்ரீகல்லூர் ஸுப்பண்ணாசார்யர்) இயற்றிய
## ஸ்ரீவிஜயராயர கவசத்தின் சுருக்கமான அர்த்தம்

ஸ்மரிஸி ப3துகிரோ தி3வ்ய சரணகெரகி3ரோ
து3ரித தரிது3 பொரெவ விஜய கு3ருக3ளெம்ப3ர ||ப||

ஸ்ரீவிஜயதாஸரை ஸ்மரணை செய்தவாறே வாழுங்கள். அவருடைய திவ்ய சரணங்களில் தினமும் சரணடையுங்கள். உங்களுக்கு வரும் கஷ்டங்கள் அனைத்தையும் விலக்கி, உங்களை காப்பார் ஸ்ரீவிஜய குருகள்.

தா3ஸ ராயனா த3யவ ஸூஸி படெ3த3னா
தோ3ஷ ரஹிதனா ஸந்தோஷ ப4ரிதனா ||1||

ஸ்ரீபுரந்தரதாஸரின் அருளை அற்புதமாக பெற்றவரான, தோஷங்கள் அற்றவரான, மகிழ்ச்சியே நிரம்பியவரான ஸ்ரீவிஜயதாஸர (ஸ்மரிஸி பதுகிரோ)

க்ஞான வந்தனா ப3லு நிதா4னி ஶாந்தனா
மான வந்தனா ப3ஹுவ தா3ன்ய தா3ந்தன ||2||

க்ஞானம் நிரம்பியவரை, மிகவும் பொறுமை, நிதானமாக, அமைதியாக இருப்பவரை, அனைத்து இடங்களிலும், அனைவராலும் மதிக்கப்படுபவரை, அற்புதமான தாராள மனப்பான்மை கொண்டவரை... (ஸ்மரிஸி பதுகிரோ)

ஹரிய ப4ஜிஸுவா நரஹரிய யஜிஸுவா
து3ரித த்யஜிஸுவா ஜனகெ ஹருஷ ஸுரிஸுவா ||3||

ஹரியை பஜிப்பவரை, நரஹரியை துதிப்பவரை, மக்களின் கஷ்டங்களை விலக்கி, அவர்களுக்கு மகிழ்ச்சியை பொழிய வைப்பவரை (ஸ்மரிஸி பதுகிரோ).

மோத3 ப4ரிதனா பஞ்சபே4த3 வரிதனா
ஸாது4 சரிதனா மனவிஷாத3 மரெதனா ||4||

ஆனந்தமயம் ஆனவரை, பஞ்சபேதங்களை அறிந்து பின்பற்றுபவரை, ஸாதுவான (அற்புதமான) சரித்திரம் கொண்டவரை அல்லது ஸாதுக்களைப் போன்ற நடவடிக்கைகளைக் கொண்டவரை, மனதின் கஷ்டங்களை / கவலைகளை விலக்கியவரை.. (ஸ்மரிஸி பதுகிரோ).

இவர நம்பி3தா3 ஜனகெ ப4வவிதெ3ம்புதூ3
ஹவணவாக3தோ3 நம்மவர மதவிது3 ||5||

இவரை (ஸ்ரீவிஜயதாஸரை) நம்பிய மக்களுக்கு ஸம்ஸாரம் என்பது இருக்குமா? (இருக்காது). ஹவன – பிறப்பு இறப்பு என்னும் இந்த ஸம்ஸார சுழற்சி அவர்களுக்கு இருக்காது. இதுவே நம் அனைவரின் கருத்தாகும். நாம் அனைவருமே ஒப்புக் கொள்ளும் விஷயம் இதுவே ஆகும்.

பாப கோடிய ராஶி லேபவாக3தோ3
தாப களெவனோ ப3லு த3யா பயோநிதி4 ||6||

ஸ்ரீவிஜயதாஸரை நம்பிய பக்தர்களுக்கு, அவர்களுக்கு வந்த பாவ மூட்டைகளின் சம்பந்தமே இருக்காது. அனைத்து பாவங்களும் அழிந்து போய்விடும். நம் அனைவரின் கஷ்டங்களையும் ஸ்ரீதாஸர் போக்குவார். அவர் அற்புதமான கருணை நிறைந்தவர்.

கவனரூபதீ3 ஹரிய ஸ்தவன மாடி3தா3
பு4வன பே3டி3தா3 மாத4வன நோடி3தா3 ||7||

நன்கு அர்த்தம் பொதிந்ததான, இனிமையான கானங்களால் (பத, உகாபோக, ஸுளாதிகளால்) ஸ்ரீஹரியை ஸ்தோத்ரம் செய்தார். அந்த மாதவனை பார்த்து வணங்கி, மகிழ்ச்சியான நிலையை அடைந்தார்.

ரங்க3னெந்த3னா ப4வவு ஹிங்கி3தெந்த3னா
மங்க3ளாங்க3னா அந்தரங்க3வரிதனா ||8||

ஸ்ரீரங்கன் ஒருவனே நம் அனைத்து ஸம்ஸார துக்கங்களிலிருந்து நம்மை விடுவிப்பவன் என்றார். அந்த ரங்கன் அனைத்து மங்களங்களையும் கொண்டிருப்பவன். அத்தகைய ஸ்ரீரங்கனை தன்னுடைய அந்தரங்கத்தில் ஸ்ரீதாஸர் நன்கு அறிந்திருந்தார்.

காஶி நக3ரத3ல்லித்3த3 வ்யாஸ தே3வனா த3யவ
ஸூஸி படெ3த3னா உல்லாஸ தனத3லீ ||9||

காசியில் இருக்கும் ஸ்ரீவேதவ்யாஸ தேவரை வணங்கினார். அவரை வணங்கி, அவரின் கருணையைப் பெற்றார். அதனால் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார்.

சிந்தெ ப்3யாடி3ரோ நிஶ்சிந்தராகி3ரோ
ஶாந்த கு3ருக3ளா பாத3வாந்து1 நம்பி3ரோ ||10||

ஆகவே, கவலைப்படாதீர்கள். அமைதியாக, த்ருப்தியுடன், மகிழ்ச்சியுடன் இருங்கள். அமைதியின் உருவமாக இருக்கும் நம் குருகளின் ஸ்ரீவிஜயதாஸரின் பாதங்களை வணங்கி, அதையே / அவரையே நம்பி இருங்கள்.

கே2த3வாக3தோ3 நிமகெ3 மோத3வாஹுதோ3
ஆதி3தே3வன ஸுப்ரஸாத3வாஹுதோ3 ||11||

(அவ்வாறு செய்தால்), உங்களுக்கு எவ்விதமான துன்பமும், கஷ்டமும் வராது. உங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியே உண்டாகும். ஆதிதேவனான ஸ்ரீஹரியின் ப்ரஸாதமே உங்களுக்கு கிடைக்கும்.

தாப தடெ3வனோ ப3ந்த3பாப கடி3வனோ
ஸ்ரீபதிய பாத3 த3 ஸமீப விடு3வனோ ||12||

தாப = தாபத்ரய = ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதெய்விக. அந்த குருகளான ஸ்ரீவிஜயதாஸர், உங்களின் கஷ்டங்களையும், தாபத்ரயங்களையும் தடுத்து நிறுத்துவார்.

உங்களுக்கு வந்ததான பாவங்களை கத்தரிப்பார் / தடுப்பார். ஸ்ரீபதியின் பாதங்களுக்கு அருகில் சென்று உங்களை விடுவார்.

க3ங்கெ3 மிந்த3ரெ மலவு ஹிங்கிதல்லதே3
ரங்க3 னொலியனோ ப4க்த ஸங்க3 தொ3ரெயதே3 ||13||

கங்கையில் ஒரு முறை குளித்தால், நம்மை சேர்ந்திருக்கும் பாவங்கள் குறையும் (என்பது உண்மைதான். ஆனால்..) ரங்கனின் அருள் கிடைக்க வேண்டுமென்றால், (கங்கையில் குளிப்பதோடு மட்டுமல்லாமல்) அவனின் பக்தர்களின் சங்கம் நமக்கு ஆகவேண்டும்.

வேத3 ஓத3லூ ப3ரிதெ3 வாத3மாட3லூ
ஹாதி3யாக3தூ3 பு3த்3ர பாத3 நம்ப3தே3 ||14||

வேதங்களை, சாஸ்திரங்களை படிப்பதால் மட்டுமே, அவை பலன்களைக் கொடுக்காது. (அதனுடைய பலன்கள் கிடைக்க வேண்டுமெனில்), கற்றறிந்த அறிஞர்களின் (குருகளின்) பாதங்களில் விழுந்து அவர்களை வணங்க வேண்டும்.

லெக்கவில்லதா3 தே3ஶ து1க்கி ப3ந்த3ரூ
து3:க2வல்லதே3 லேஶ ப4க்தி தொ3ரெயதோ3 ||15||

எந்தவொரு குறிக்கோளும் (பக்தியும்) இன்றி, பல்வேறு தீர்த்த யாத்திரைகளை செய்தாலும், அதனால் உங்களுக்கு துக்கமே (சோர்வு) வரும். பக்தி கிடைக்காது (வராது).

தா3னமாட3லூ தி3வ்ய கா3ன பாட3லூ
க்ஞான தொ3ரெயதோ3 இவர அதீ4னவாக3தே3 ||16||

தானங்களைக் கொடுப்பதாலும், பக்திப் பாடல்களைப் பாடுவதாலும் எவ்வித க்ஞானமும் வராது (கிடைக்காது). (அந்த க்ஞானம் வரவேண்டுமெனில்), அவர் குருகளான ஸ்ரீவிஜயதாஸரின் பாதங்களை சரணடைய வேண்டும்.

நிஷ்டெயாதகே^ கண்ட3 கஷ்டவ்யாதகே
தி3ட்ட கு3ருக3ளா பாத3 முட்டி ப4ஜிஸிரோ ||17||

ஏன் இவ்வளவு கஷ்டங்களை படவேண்டும்? (கங்கையில் குளிப்பது, தானங்களைக் கொடுப்பது..). மற்றும் அதனால் வரும் ப்ரச்னைகளை சந்திக்க வேண்டும்?. (இவற்றை விட) ஒரு தக்க குருகளின் பாதங்களை சென்று சேரலாம். அந்த குருகளின் பாதங்களைத் தொட்டு வணங்குங்கள்.

பூஜெ மாட3லூ கண்ட3 கோ3ஜு பீ3ளலு
பீ3ஜமாதினா ப2ல ஸஹஜ தொ3ரெயது ||18||

வெறும் பூஜை செய்வதால், தேவையில்லாத காம்ய கர்ம சுழல்களில் சென்று விழுவதால், சாஸ்த்ர க்ரந்தங்களின் உண்மையான அர்த்தங்கள் நமக்குக் கிடைக்காது (புரியாது).

ஸூரரு எல்லரு இவர கரவ பிடி3வரோ
தரள ரந்த3தீ3 ஹிந்தெ3 திருகு3திப்பரோ ||19||

தேவர்கள் அனைவரும் இவருடைய கைகளை பிடிப்பதற்கு வருகின்றனர். சிறுவர்களைப் போல இவர் பின்னாலேயே சுற்றி வருகின்றனர்.

க்3ரஹக3ளெல்லவூ இவர்கெ3 ஸஹாய மாடு3தா
அஹோ ராத்ரிலீ ஸுக2த்3 நிஹவ கொடுவவோ ||20||

அனைத்து க்ரஹங்களும் ஸ்ரீவிஜயதாஸருக்கு உதவி செய்கின்றன. இரவும் பகலுமாக அவருக்கு சுகத்தையே, மகிழ்ச்சியையே தருகின்றன.

வ்யாதி3 பா3ரதோ3 தே3ஹ பா3தெ4 தட்டதொ3
ஆதி3தே3வன ஸுப்ரஸாத3வாஹுதோ3 ||21||

குருகளின் பாதங்களை சரண் அடைந்தவர்களுக்கு – எந்தவொரு வ்யாதியும் வராது; தேகத்திற்கு எவ்வித ப்ரச்னைகளும் வராது. மேலும், ஸ்ரீஹரியின் ஸுப்ரஸாதமான மோக்ஷமும் கிடைக்கும்.

பதித பாமரா மந்த3மதியு நா ப3லூ
துதிஸலாபெனெ இவர அதிஶயங்க3ளா ||22||

மதி மயங்கியவன், படிக்காதவன், புத்தி குறைவானவன் (நான்) ஸ்ரீவிஜயதாஸரைப் பற்றி முழுவதுமாக அறியவில்லை. இவர் நிகழ்த்திய அதிசய அற்புதங்களை, இவருடைய மகிமைகளை என்னால் முழுமையாக விளக்கவும் முடியுமோ? (முடியாது).

கருணதி3ந்த3லீ எம்ம பொரெவனல்லதே3
து3ரித கோடியா பே3க3 தரிவ த3யத3லீ ||23||

குருவான ஸ்ரீவிஜயதாஸர் கருணையுடன் நம்மை இஹலோகத்தில் காப்பது மட்டுமல்லாமல், நம் கோடிக்கணக்கான கஷ்டங்களை உடனடியாக, கருணையுடன் தீர்த்தும் வைக்கிறார்.

மந்த3மதிக3ளு இவர செந்த3வரியதே3
நிந்தெ3மாட3லூ ப4வத3 ப4ந்த3 தப்பதோ3 ||24||

மந்தமதிகளானவர்கள் ஸ்ரீவிஜயதாஸரின் மகிமைகளைப் பற்றி சரியாக அறியாமல், இவரை திட்டினால் / புறக்கணித்தால், அப்படிப்பட்டவர்களுக்கு ஸம்ஸார பந்தம் தப்பாது.

இந்தி3ராபதீ இவர முந்தெ3 குணிவனோ
அந்த3வசனவா நிஜகெ தந்து3 கொடு3வனோ ||25||

பக்தவத்ஸலனான, இந்திராபதியான ஸ்ரீஹரி இவர்முன் வந்து ஆடுகிறான். ஸ்ரீவிஜயதாஸர் கூறிய வசனங்களை / வாக்குகளை, உண்மை ஆக்குகிறான்.

உத3ய காலதீ3 ஈ பத3வ படிஸலூ
மத3ட3னாத3ரூ க்ஞான உத3யவாகு3தோ3 ||26||

யாரொருவர் தினமும் உதய காலத்தில் இந்த பதத்தினை (ஸ்ரீவிஜயராய கவசத்தினை) படிக்கிறார்களோ, அவர்கள் ஒரு முட்டாளாக இருந்தாலும், அவருக்கு யதார்த்த க்ஞானம் உதயமாகும்.

ஸடெ[1] இத[3]ல்லவோ வ்யாஸவிட்[2]ட[2]ல ப[3]ல்லனோ
படிஸ பஹுதி[3]தொ[3] கேளி குடில ரஹிதரு ||27||

மேலே ஸ்தோத்திரத்தில் & பல-ஸ்ருதியில் கூறியவை எதுவும் பொய் அல்ல. மிகைப்படுத்தி சொல்லியதும் அல்ல. அனைத்தும் உண்மையே. இதை நான் சொல்லவில்லை. ஸ்ரீவ்யாஸ விட்டலனே இதற்கு சாட்சி. ஆகவே அந்த ஸ்ரீவ்யாஸ விட்டலனின் ஸத்பக்தர்கள் அனைவரும் இந்த ஸ்தோத்திரத்தை கட்டாயம் படிக்க வேண்டும்.

***

## ஸ்ரீவ்யாஸவிட்டல தாஸர் (ஸ்ரீகல்லூர் ஸுப்பண்ணாசார்யர்) இயற்றிய
## ஸ்ரீவிஜயராயர கவசம்
## (விரிவான விளக்கங்கள்)

ஸ்மரிஸி ப3துகிரோ தி3வ்ய சரணகெரகி3ரோ
து3ரித தரிது3 பொரெவ விஜய கு3ருக3ளெம்ப3ர ||ப||

ஸ்ரீவிஜயதாஸரை நினைத்தவாறே வாழுங்கள். அவருடைய திவ்ய சரணங்களில் தினமும் சரணடையுங்கள். உங்களுக்கு வரும் கஷ்டங்கள் அனைத்தையும் விலக்கி, உங்களை காக்கும் ஸ்ரீவிஜய குருகள் என்பவரை.

* ஸ்ரீவிஜயதாஸர், காசி, காஞ்சி, போன்ற பற்பல தீர்த்த க்ஷேத்ரங்களுக்கு பல முறை மிகச் சிறந்த பக்தியுடன் சென்று வந்தவர். அத்தகைய திவ்யமான சரணங்களை நாம் வணங்க வேண்டும்.

* ஸ்ரீவிஜயதாஸர், முந்தைய அவதாரத்தில் ப்ருகு முனிவராக இருந்தபோது, ஸ்ரீஹரி ஸர்வோத்தமத்வத்தை ஸ்தாபனை செய்ய, கைலாயம், ஸத்ய லோகம், வைகுண்டம் என அனைத்து இடங்களுக்கும் ஸஞ்சாரம் செய்த சரணங்களைக் கொண்டவர். அத்தகைய திவ்யமான சரணங்களை நாம் வணங்க வேண்டும்.

* அவ்வாறு ப்ருகு முனிவர், வைகுண்டத்திற்குச் சென்றபோது, அவருடைய சரணங்கள் ஸ்ரீவிஷ்ணுவின் வக்ஷஸ்தளத்தையே ஸ்பரிசம் செய்தவை. ஆகையால், அத்தகைய திவ்யமான சரணங்களை நாம் வணங்க வேண்டும்.

* சரண = 'சர' என்றால் க்ஞான; 'ண' என்றால் பக்தி. ஸ்ரீவிஜயதாஸரின் சரணங்களை வணங்கினால், நமக்கு க்ஞான & பக்தி வளர்கிறது.

* பாத தரிசனம், பாப நாஶனம் - என்று ஒரு புகழ்பெற்ற வசனம் இருக்கிறது. ஆகவே, ஸ்ரீவிஜயதாஸரின் பாதங்களை தரிசனம் செய்து, அவற்றை அடைந்து, நம் பாவங்களை நாம் போக்கிக் கொள்வோமாக.

* மரண ஸமயதல்லி நின்ன சரண ஸ்மரணெ கருணிஸய்யா நாராயணா - என்று ஸ்ரீகனகதாஸர் தனது கேஶவ நாமாவில் பாடியபடி, சரண ஸ்மரணை நமக்கு எக்காலத்திற்கும் மிகவும் முக்கியமான விஷயமாகும். ஆகவே, ஸ்ரீவிஜயதாஸரின் திவ்யமான சரணங்களை நாம் வணங்க வேண்டும்.

* மன விஷயதொ3ளகி3ரிஸி விஷயவ
மனதொ3ளகெ3 நெலெகொ3ளிஸி ப3லு னூ
தனவு சுஸமீசீன விது3பாதே3யவெந்த3ருபி |
கனஸிலாத3ரு தன்ன பாத3த3
நெனெவனீயதெ3 ஸர்வரொளகி3
த்த3னுப4விஸுவனு ஸ்தூ2லவிஷயவ விஷ்வனெந்தெ3னிஸி ||
(ஹரிகதாம்ருதஸாரம் 3-15)

ஸாத்விகர்களின் மனதை மட்டும் தன் பாதாரவிந்த ஸ்மரணையில் நிறுத்தி, விஷய சுகங்கள் அனைத்தும் தற்காலிகமானவை என்று சொல்லி, அவர்களுக்கு க்ஞானத்தைக் கொடுக்கிறான் ஸ்ரீபரமாத்மன் - என்று ஸ்ரீஜகன்னாததாஸர் இந்த ஹரிகதாம்ருதஸார பத்யத்தில் தெரிவிக்கிறார்.

இதிலிருந்து சரண ஸ்மரணை எவ்வளவு முக்கியம் என்று தெரிகிறது. இதையே ஸ்ரீஸுப்பண்ணாசார்யர் இந்த பல்லவியிலும் தெரிவிக்கிறார்.

* ஸ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாத ஸேவனம் |
அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் ஸக்யம் ஆத்ம நிவேதனம் ||
என்று நவவித பக்தியில் ஒன்றான ‘பாத ஸேவனம்’ நமது தாஸ்ய பாவத்தை வெளிப்படுத்துவதில் மிகவும் முக்கியமானது. அத்தகைய சிறந்ததான ‘பாத ஸ்மரணை’ & ‘பாத ஸேவனம்’ ஆகியவற்றை நம் குருவிடம் மிகவும் பக்தியுடன் செய்ய வேண்டும்.

* ஸ்ரீஹரியின் வலது பாதம் க்ஞான ஸ்வரூபம். இடது பாதம் ஆனந்த ஸ்வரூபம். பகவானை ஒருவர் எப்படி உபாசனை செய்கிறாரோ, அவர் அதனையே பெறுகிறார். ஆகவே, அனைவரும் வாழ்க்கையில் மிகவும் அவசியமான க்ஞானம் மற்றும் ஆனந்தத்தைப் பெறுவதற்கு, ஸ்ரீஹரியின் (& குருகளின்) பாதங்களை நாம் சரணடைய வேண்டும். உபாஸனை செய்ய வேண்டும்.

* வி எந்து நுடியலு விஷய லம்பட தூர;
ஜ எந்து நுடியலு ஜனன ஹானி
ய எந்து கொண்டாடெ யமபடரு ஓடுவரு
ராய எந்தெனு ஹரிகாவா வரவீவா

விஜயராயர சரண நிஜவாகிநம்பலு
அஜன பிதனு தானெ ஒலிவா ||ப||

என்று ஸ்ரீமோஹன தாஸர் பாடியிருப்பதற்கேற்ப, ஸ்ரீவிஜயதாஸரை ஸ்மரணை செய்தாலே, அனைத்து இஷ்டார்த்தங்களும் நிறைவேறும். ஆகவே ‘ஸ்மரிஸி பதுகிரோ’.

* ஸ்ரீவிஜயதாஸர பதகளே மல்லிகெ
ஸ்ரீவிஜயதாஸர பத்யவே ஸம்பிகெ
என்று ஸ்ரீஸீதாராம விட்டலதாஸர், ஸ்ரீதாஸரின் பாதகமலங்களைப் பற்றி, அவற்றின் சிறப்புக்களைப் பற்றி பாடியிருக்கிறார். ஆகவே ‘திவ்ய சரணக்கெரகிரோ’.

* தாஸரொடனெ ஆடதவன, தாஸரொடனெ பாடதவன
தாஸர கொண்டாதவன, ஹரிதாஸனாகதவன ஜன்ம --
வ்யர்த்தவல்லவே ஜன்ம வ்யர்த்தவல்லவே
என்று ஸ்ரீபுரந்தரதாஸர் பாடியதற்கேற்ப, ஸ்ரீவிஜயதாஸரை நாம் எப்போதும் ‘ஸ்மரிஸி பதுகிரோ திவ்ய சரணக்கெரகிரோ’ என்று கொண்டாடுவோம்.

* ஸ்ரீமோஹனதாஸரின் துர்மரண சமயத்தில், ஸ்ரீவிஜயதாஸரே கூறியிருந்தபடி, ஸ்ரீமோஹனதாஸரின் மனைவியானவர் அவரை ஸ்மரணை செய்ய, அடுத்து அவர் யமலோகத்திற்குச் சென்று, ஸ்ரீமோஹனதாஸரை உயிர்ப்பித்தார் என்னும் விஷயத்தை நாம் அறிகிறோம். ஆகவே, ஸ்ரீவிஜயதாஸரின் ஸ்மரணை மரண பயத்தையும் வெல்கிறது என்பதற்கு இதுவே சிறந்த உதாரணம் ஆகும்.

- கு$^3$ருக$^3$ள ஸ்மரணெயிந்த$^3$ ஸகல ஆபத்து பரிஹார
  கு$^3$ருக$^3$ள ஸ்மரணெயிந்த$^3$ ஸகல ஸம்பத்து
  கு$^3$ருக$^3$ள ஸ்மரணெயிந்த$^3$ விஶேஷ த$^4$ன தொ$^3$ரகுவுது$^3$
  கு$^3$ரு ஸ்மரணெயிந்த$^3$ ஹரியொலிது$^3$ பொரெவா

என்று ஸ்ரீவரதகோபால விட்டலதாஸர் பாடியிருப்பதைப் போல, குரு ஸ்மரணையினால் அனைத்து நற்பலன்களும் கிடைக்கின்றன என்பதை அறியலாம்.

* ஆபாத கௌளி பர்யந்தம் குரூணாம் ஆக்ருதிம் ஸ்மரேத்
தேன விக்னா: ப்ரணஸ்யந்தி ஸித்தயந்திச மனோரதா: ||
என்று கூறியுள்ளபடி, குருகளை நினைக்க வேண்டுமெனில் பாதங்களிலிருந்தே சிந்தனையை துவக்க வேண்டும். ஆகவே, ஸ்ரீவிஜயதாஸரின் 'திவ்ய சரணக்கெரகிரோ' என்கிறார் ஸ்ரீஸுப்பண்ணாசார்யர்.

- ஸ்ரீஹரிகதாம்ருதஸாரத்தில் ஸ்ரீஜகன்னாததாஸர் செய்துள்ள 'ப்ருகு முனிவரின் ஸ்தோத்ரத்தையும்' பார்க்கலாம்.

ஆ ஸரஸ்வதி தீரத$^{3}$லி பி$^{3}$-
ன்னைஸலா முனிக$^{3}$ள நுடி$^{3}$கெ$^{3}$ ஜட$^{3}$-
ஜாஸன மஹே ஶாச்யுதர லோகக$^{3}$ளிகெ$^{3}$போகி$^{3}$
தா ஸகல கு$^{3}$ணக$^{3}$ள விசாரிஸெ
கேஶவனெ பரதை$^{3}$வவெந்து$^{3}$ப-
தே$^{3}$ஶிஸித$^{3}$ ப்$^{4}$ருகு$^{3}$முனிப கொட$^{3}$லெமக$^{3}$கி$^{2}$ள புருஷார்த$^{2}$ ||
( ஸ்ரீ ஹரிகதா$^{2}$ம்ருதஸார ஸந்தி$^{3}$: 32, பத$^{3}$: 27 )

***

தா$^{3}$ஸ ராயனா த$^{3}$யவ ஸூஸி படெ$^{3}$த$^{3}$னா
தோ$^{3}$ஷ ரஹிதனா ஸந்தோஷ ப$^{4}$ரிதனா ||1||

* தாஸராயனா தயவ ஸூஸி படெதனா -> தாஸர்களில் சிறந்தவரான ஸ்ரீபுரந்தரதாஸரின் அருளைப் பெற்றவர் ஸ்ரீவிஜயதாஸர். அவருடைய வீட்டில் பசுவாக பிறந்து சேவை செய்தவர். அவரது மகனாக மத்வபதியாக பிறந்து தந்தையின் சேவை செய்தவர்.

* தாஸராயனா தயவ ஸூஸி படெதனா -> தாஸர்களின் தலைவரான ஸ்ரீவ்யாஸராஜரின் அருளைப் பெற்றவர். ஸ்ரீவிஜயதாஸர் மத்வபதியாக இருந்தபோது, ஸ்ரீவ்யாஸராஜரின் பூஜை சமயத்தில் தேவர நாமாக்களைப் பாடியதன் பலன், அவருடைய அருளைப் பெற்று பிறகு ஸ்ரீவிஜயதாஸர் ஆனார்.

* தாஸராயனா தயவ ஸூஸி படெதனா -> 'தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய' என்று கூறிய ஸ்ரீஹனுமந்த தேவரின் அருளைப் பெற்றவர். ஸ்ரீவிஜயதாஸர் மத்வபதியாக இருந்தபோது, யந்த்ரோத்தாரக ஹனுமந்த தேவருக்கு பூஜைகளை செய்து, ப்ரஸாதத்தை ஊட்டியதால் அவருடைய அருளைப் பெற்று பிறகு ஸ்ரீவிஜயதாஸர் ஆனார்.

* தாஸராயனா தயவ ஸூஸி படெதனா -> ஆசார்ய மத்வரின் முழுமையான அருளைப் பெற்றவர் ஸ்ரீவிஜயதாஸர். ஸ்ரீமத்வரின் நிர்ணய க்ரந்தங்களின்படியே, அவற்றில் உள்ள கருத்துக்களையே, அவருடைய அருளாலேயே ஸுளாதிகளாக இயற்றி நமக்குக் கொடுத்தவர்.

* தாஸராயனா தயவ ஸூஸி படெதனா -> தாஸர்களுக்கெல்லாம் தலைவனான ஸ்ரீஹரியின் அருளைப் பெற்றவர் ஸ்ரீவிஜயதாஸர். சிறிய வயதில் தாஸப்பா, தன் தாய்மாமன் ராகவேந்த்ர ராயரின் வீட்டிற்குச் சென்றிந்தபோது, அவருக்கு அவமானமே ஏற்பட்டது. அங்கிருந்து வைராக்யம் கொண்டு தாஸப்பா சென்ற இடம் காசி. அங்கு பிந்துமாதவனே, ஸ்ரீபுரந்தரதாஸரின் வேடத்தில்

வந்து, வ்யாஸ காசிக்கு அழைத்துச் சென்று, அங்கிதம் கொடுத்து அருளிய சம்பவம் அனைவரும் அறிந்ததே.

* தோஷ ரஹிதனா. ஸ்ரீவிஜயதாஸர், காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்ய என்பதான அரிஷட் வர்க்கங்களும் அற்றவர்.

* ஸந்தோஷ பரிதன - ஸந்தோஷ என்றால் பகவத் ப்ரஸாதம். இஹ ஸந்தோஷங்களை அவர் வேண்டாம் என்று புறக்கணித்து, பகவத் ப்ரஸாதத்தையே அதிகம் விரும்பினார். அதையே அடையவும் செய்தார்.

***

க்ஞான வந்தனா ப3லு நிதா4னி ஶாந்தனா
மான வந்தனா ப3ஹுவ தா3ன்ய தா3ந்தன ||2||

க்ஞானம் நிரம்பியவரை, மிகவும் பொறுமை, நிதானமாக, அமைதியாக இருப்பவரை, அனைத்து இடங்களிலும், அனைவராலும் மதிக்கப்படுபவரை, அற்புதமான தாராள மனப்பான்மை கொண்டவரை... (ஸ்மரிஸி பதுகிரோ) ஸ்மரணை செய்தவாறே வாழ்வோம்.

* க்ஞானி ஆனவருக்கு நிதானம், ஶாந்தம் ஆகியவை தேவை. அப்போதே மக்கள் அவரை மதிப்பார்கள். வணங்குவார்கள். அப்போதே ஸ்ரீஹரி அந்த க்ஞானியின் மூலம் மக்களுக்குத் தேவையானவற்றை கொடுக்கிறான். அப்படிப்பட்ட நற்குணங்களை, க்ஞானியான ஸ்ரீவிஜயதாஸர் கொண்டிருந்தார்.

* ஸ்ரீவிஜயதாஸர் ஒரு அபரோக்ஷ க்ஞானி. என்றால், 'அந்தரங்கத்தில்' ஸ்ரீஹரியைக் கண்டவர். இது உயர்ந்த, சிறந்த க்ஞானத்தை அடைந்தால் / பெற்றிருந்தால் மட்டுமே சாத்த்தியம் என்ற வகையில், ஸ்ரீவிஜயதாஸர் அத்தகைய பர-வித்யா என்னும் க்ஞானத்தைப் பெற்றிருந்தார் என்பது நன்றாகத் தெளிவாகிறது.

* இத்தகைய க்ஞானத்தைக் கொண்டிருக்கும் க்ஞானிக்கு இருப்பதான ஒரு முக்கிய பண்பு என்னவெனில், மற்றொருவரின் ஸ்வபாவத்தை துல்லியமாக மதிப்பிட முடிவதே ஆகும். ஸ்ரீவிஜயதாஸரும் இத்தகைய திறனைக் கொண்டிருந்து, அதனை தன்னுடைய தனிப்பட்ட லாபத்திற்காக பயன்படுத்தாமல், தன்னை அடைந்தவர்களை சரியான பாதையில் செலுத்துவதற்காகவே பயன்படுத்தினார். நமக்குத் தெரிந்த நல்ல உதாரணங்களான, ஸ்ரீகோபாலதாஸர், ஸ்ரீஜகன்னாததாஸர், ஸ்ரீவ்யாஸ விட்டலர் போன்றவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்தே இதை நாம் அறிந்து கொள்ளலாம்.

- பற்பல சிஷ்யர்களுக்கு அருளிய தயாளு ஸ்ரீவிஜயதாஸர் என்பதை ஸ்ரீஸீதாராம விட்டல தாஸர், 'நோடபன்னி நோடபன்னி விஜயராயர' என்ற தன் பாடலில் இவ்வாறு பாடுகிறார்.

வேணுகோ3பால வ்யாஸ மோஹனதா3ஸர |
ஜாணராகி3 மாடி3தந்த2 விஜயராயர ||
தா3ஸ ஜக3ன்னாத2ர த3ய காரணராத3வர |
ஸூஸு கருணி ஸுரிஸித3ந்த2 விஜயராயர ||

* பலு நிதானி, ஶாந்த போன்றவற்றை நிரூபிப்பதற்கு ஸ்ரீவிஜயதாஸரின் வாழ்க்கையிலேயே பல சம்பவங்கள் இருக்கின்றன. கடும் அவமதிப்புகளையும், இழிவுகளையும் அவர் சந்தித்தபோதும்,

அவர் பொறுமையுடன் இருந்து, அப்படி செய்தவர்களையே ஆசிர்வதித்ததைப் பற்றி நாம் படிக்கிறோம்.

* பஹுவதான்ய தாந்தன என்பதன் அர்த்தம் = ஸ்ரீவிஜயதாஸரை சந்தித்து, அவர் மூலம் பயன் பெறாதவர் என்று யாருமே கிடையாது என்று சொல்லலாம். செல்வம், அறிவு, புகழ், ஆரோக்யம் என கேட்டவர்களுக்கு கேட்டவற்றை வாரி வழங்கிய மஹானுபாவர். இதற்கு மிகச்சிறந்த உதாரணம் ஸ்ரீமோஹனதாஸர். ஸ்ரீமோஹனதாஸரின் தாயார் தற்கொலை செய்ய முனைந்தபோது, ஸ்ரீவிஜயதாஸர் அதனைத் தடுத்து, தாயையும் மகனையும் தன் இல்லத்தில் அடைக்கலம் அளித்தார். தன் சொந்த சகோதரியும் சகோதரன் மகனும் போல, அவர்களின் வாழ்நாள் முழுவதும் இருவரையும் பராமரித்து, ஸ்ரீமோஹனதாஸர் தன் தனிப்பட்ட அடையாளத்துடன் புகழ்பெற்ற ஒரு ஹரிதாஸராக ஆவதற்கு உதவினார்.

* ஸ்ரீவிஜயதாஸரின் க்ஞான, பக்தி, வைராக்யத்திற்கு இணை யாருமே இல்லை என்று பாடும் ஸ்ரீஹயவதன விட்டல தாஸரின் பாடலிலிருந்து ஒரு பத்தி இவ்வாறு உள்ளது.

வைராக்3ய க்ஞான ப4குதியலி இவர ஸரி
ஆரனாத3ரூ காணெ ஸீமெயொளகெ3
காருண்யத3லி ஈ பரி சரிஸுவ சரிதெ
தா4ருணீ ஸுரரெல்ல கேளி ஹிக்3கி3த3ரு ||3||

என்ன குலவிந்து3 பாவனவாயிதொ
மன்னிஸி விட2ல மனெகெ3 ப3ரலாகி3 ||ப||

***

ஹரிய ப4ஜிஸுவா நரஹரிய யஜிஸுவா
து3ரித த்யஜிஸுவா ஜனகெ ஹருஷ ஸுரிஸுவா ||3||

ஹரியை பஜிப்பவரை, நரஹரியை துதிப்பவரை, மக்களின் கஷ்டங்களை விலக்கி, அவர்களுக்கு மகிழ்ச்சியை பொழிய வைப்பவரை (ஸ்மரிஸி பதுகிரோ).

* இங்கு 'பஜிஸுவ' , 'யஜிஸுவ' என்று இரு பதங்கள் உள்ளன. நாம் பெற வேண்டிய (யதார்த்த) க்ஞான, நாம் செய்ய வேண்டிய ஸத்கர்ம, இவை இரண்டையும் முன்னர் சொன்ன இரு பதங்களுடன் பொருத்தலாம். அதாவது, பஜிஸுவ என்றால் க்ஞானம். மனதுடன் தொடர்புடைய அனைத்து செயல்களையும்; அடுத்து 'யஜிஸுவ' என்றால் கர்மங்கள். யக்ஞ, யாக, பூஜை, புனஸ்காரங்கள் என அனைத்தையும் குறிப்பதாக எடுத்துக் கொள்ளலாம். ஆக, நாம் செய்ய வேண்டிய புற செயல்களான, ஸ்ரீமதாசார்யர் நிர்ணயம் செய்து தந்த்ரஸார ஸங்க்ரஹத்தில் கொடுத்துள்ள வழிமுறைகளின்படியான பாஹ்ய (புற) செயல்கள் மற்றும், த்யானம், மனனம், நிதித்யாஸனம் போன்ற ஆந்தரிக (அக) - க்ஞானத்தை பெறக்கூடியதான செயல்கள்.

* இவற்றை ஸ்ரீவிஜயதாஸர் பக்தியுடன் செய்து ஹரியை, நரஹரியை வணங்கினார் என்று ஸ்ரீஸுப்பண்ணாசார்யார் குறிப்பிடுகிறார்.

* மற்ற தத்துவங்கள் கர்மம், க்ஞானம், வைராக்யம், பக்தி ஆகியவற்றுக்கிடையில் ஒரு படிநிலை (hierarchy) இருப்பதாகக் கூறுகின்றன. சிலர் க்ஞானத்துக்கு முக்கியத்துவம் அளிக்கிறார்கள்; சிலர் கர்மத்துக்கு முக்கியத்துவம் தருகிறார்கள்; இவ்வாறாக வேறுபாடுகள் உள்ளன. ஆனால், பகவத்

க்ஞானத்தினாலேயே, பகவத் ப்ரஸாதம். அந்த க்ஞானம், கர்மங்களை தக்க அனுஸந்தானங்களுடன் தொடர்ந்து செய்வதால் கிடைக்கிறது. இவற்றின் மூலம், பக்தி வளர்ந்து, மேலும் க்ஞானம் பெற முடிகிறது - என்று த்வைதம் சொல்கிறது. ஸ்ரீவிஜயதாஸர் இவ்வாறான க்ஞான, கர்மங்களால் ஸ்ரீஹரியை, ஸ்ரீநரஹரியை வணங்கினார் என்றும் ஸ்ரீஸுப்பண்ணாசார்யார் சொல்கிறார்.

* இன்னும் சிறப்பாக சொல்வதென்றால், ஸ்ரீவிஜயதாஸர் செய்த அனைத்து செயல்களும், கர்மங்களும், ஹரிபூஜையாகவே இருந்தன. அவற்றின் ஒரே நோக்கம் 'ஹரி ப்ரீதி' மட்டுமே. தன் அனைத்து செயல்களையும் அவர் ஸ்ரீஹரிக்கே அர்ப்பணம் செய்தார்.

* ஸ்ரீவிஜயதாஸர் முற்றிலும் சுயநலமற்றவராக இருந்ததால், தனிப்பட்ட ஆனந்தத்திலேயே நின்றுவிடாமல், சென்ற இடமெல்லாம் மகிழ்ச்சியைப் பகிர்ந்தளித்தார் என்றும் இந்த இரண்டாம் வரி தெரிவிக்கிறது.

* 'துரித த்யஜிசுவ, ஹருஷ சுரிசுவ' - தன்னை நம்பியவர்களின் / பக்தர்களின், துக்க நிவர்த்தி, சுக ப்ராப்தி என்ற இரண்டையும் ஸ்ரீவிஜயதாஸர் நிறைவேற்றுகிறார் என்றும் அர்த்தம் சொல்லலாம்.

- ஸ்ரீனிவாஸனிடம் தனக்கு (நமக்கு) நிரந்தரமான பக்தி வரவேண்டும் என்று ஸ்ரீவிஜயதாஸரிடம் வேண்டிக் கொள்வதாக, ஸ்ரீதந்தெ ஸ்ரீனிவாஸ தாஸர், தனது ஸ்ரீவிஜயதாஸர ஸ்தோத்ர ஸுளாதியில் இவ்வாறு கூறுகிறார்.

வ்யாப்த த$^{4}$ர்ஶியெ யென்ன தப்புக$^{3}$ளெணிஸதெ$^{3}$
ப்ராப்தனாகி$^{3}$ தி$^{3}$வ்ய தத்வோபதே$^{3}$ஶவ மாடி$^{3}$
கு$^{3}$ப்தசர்யதி$^{3}$ ஜபதப மௌன க்ஞானதி$^{3}$ந்த$^{3}$
ஸப்தகாலக$^{3}$ளல்லி ஸப்த ஸாமக$^{3}$ரூப
ஆப்த ஸிரி தந்தெ$^{3}$ ஸ்ரீநிவாஸன த்$^{4}$யானதொ$^{3}$ளு
லிப்தனாகி$^{3}$ ஸுகி$^{2}$ஸுவ ஸம்பத்து நீடோ$^{3}$ ||5||

***

மோத$^{3}$ ப$^{4}$ரிதனா பஞ்சபே$^{4}$த$^{3}$ வரிதனா
ஸாது$^{4}$ சரிதனா மனவிஷாத$^{3}$ மரெதனா ||4||

மோத$^{3}$ ப$^{4}$ரிதனா = விரும்பியது கிடைத்தால் வருவதே மகிழ்ச்சி
ஆனந்தமயம் ஆனவரை, பஞ்சபேதங்களை அறிந்து பின்பற்றுபவரை, ஸாதுவான (அற்புதமான) சரித்திரம் கொண்டவரை அல்லது ஸாதுக்களைப் போன்ற நடவடிக்கைகளைக் கொண்டவரை, மனதின் கஷ்டங்களை / கவலைகளை விலக்கியவரை.. (ஸ்மரிஸி பதுகிரோ).

* மோத பரிதனா என்றால் ஆனந்தமயமாக இருப்பவரை, ஆனந்தமயமானவருடன் இருப்பவரை என்று அர்த்தம் செய்தால், மோத தீர்த்தர் = ஆனந்த தீர்த்தர் = ஸ்ரீமதாசார்யர் - இவருடன் இருப்பவர் என்று அர்த்தம் வருகிறது. ஸ்ரீமத்வருடன் இருப்பவர் என்றால், எப்போதும் அவருடைய க்ரந்தங்களை அத்யயனம் செய்பவர், அந்த நிர்ணய கருத்துக்களை பின்பற்றுபவர் என்று புரிந்து கொள்ளலாம்.

* ஸாது சரிதனா என்றால், ஸ்ரீமதாசார்யாரின் தந்த்ரஸார ஸங்க்ரஹத்தில் சொல்லியுள்ளபடி, ஸதாசாரங்களை பின்பற்றுபவர் என்றும் அர்த்தம் கொள்ளலாம். அதாவது, அந்தரங்க & பாஹ்ய

என்று இரு விதமான ஶ்ருத்தியும், தக்க ஆசரணைகளையும் கொண்டவர் ஸ்ரீவிஜயதாஸர் என்று அறிய வேண்டும். இதை படிக்கும் நாமும் அத்தகைய பழக்கங்களை பின்பற்ற வேண்டும் என்பது கருத்து.

* பஞ்சபேதவரிதனா = த்வைத ஸித்தாந்தத்தின் முக்கியமான கோட்பாடுகளில் ஒன்றானது 'பஞ்ச பேதம்' . அதாவது, ஜீவ-ஜீவ பேத, ஜீவ-ஈஶ பேத, ஜீவ-ஜட பேத, ஈஶ-ஜட பேத மற்றும் ஜட-ஜட பேத. இந்த பஞ்ச பேதத்தை சரியாக அறிந்தாலே மோக்ஷம் என்று ஸ்ரீமதாசார்யார் நிர்ணயம் செய்திருக்க, இதனை அப்படியே சரியாக அறிந்தவர் ஸ்ரீதாஸர் என்றும், அதனை அறிந்ததால், 'மோத பரிதனா' ஆனந்தமயமாக இருக்கிறார் என்றும் சொல்லலாம்.

* பஞ்சபேதத்தைப் பற்றியதான ஸ்ரீஹரிகதாம்ருதஸாரத்திலிருந்து ஒரு பத்யம். இதன் க்ஞானத்தின் அவசியத்தை ஸ்ரீஜகன்னாததாஸர் எப்படி சொல்லியிருக்கிறார் என்பதையும் பார்க்கிறோம்.

ஜீவஜீவர பே4த3 ஜட3ஜட3
ஜீவஜட3 ஜட3ஜீவரிந்த3லி
ஸ்ரீவரனு அத்யந்தபி4ன்ன விலக்ஷணனு லகுமி
மூவரிந்த3லி பதுமஜாண்ட3தி3
தா விலக்ஷணளெ னிசுதிப்பளு
ஸாவதி4கஸம ஶூன்யளெந்த3ரிதீர்வரனு ப4ஜிஸு ||29

* இந்த பத்யத்தில் வரும், 'மோத பரித' , 'ஸாது சரித' , 'மன விஷாத மரெத' - ஆகிய பண்புகளைப் பார்த்தால், இவை அனைத்தும் ஸ்ரீஹரியின் நற்குணங்களே ஆகும் என்று தெரிய வருகிறது. அவ்வாறு, ஸ்ரீஹரியின் குணங்களை வேத சாஸ்த்ரங்கள் மூலமாக அறிந்து, அதை அப்படியே பின்பற்ற முயல்பவர்கள் சிறந்த பாகவதர்கள் என்று முடிவு செய்யலாம். அவ்வாறு செய்பவரான ஸ்ரீதாஸரின் ஆளுமையைப் பற்றியும் நான் அறியலாம்.

- குருகளின் சரணடைந்து, அவருக்குத் தெரிந்த பஞ்சபேத க்ஞானத்தை தமக்கும் உபதேசம் செய்யுமாறு இவ்வாறு வேண்டிக் கொள்கிறார் ஸ்ரீவரகட3தி3ன்னீஶேஷ விட்டல தாஸர்.

ஹரியெ பரனு ஸிரியெ மொத3லு
ஸரஸிஜோத்3ப4வாத்3யரெல்ல
ஹரிகெ3 தா3ஸரெம்பொ3 க்ஞான
தரதம பஞ்சபே4த திளிஸொ ||2||

***

இவர நம்பி3தா3 ஜனகெ ப4வவிதெ3ம்புதூ3
ஹவணவாக3தோ3 நம்மவர மதவிது3 ||5||

இவரை (ஸ்ரீவிஜயதாஸரை) நம்பிய மக்களுக்கு ஸம்ஸாரம் என்பது இருக்குமா? (இருக்காது). ஹவன - பிறப்பு இறப்பு என்னும் இந்த ஸம்ஸார சுழற்சி அவர்களுக்கு இருக்காது. இதுவே நம் அனைவரின் கருத்தாகும். நாம் அனைவருமே ஒப்புக் கொள்ளும் விஷயம் இதுவே ஆகும்.

* ஸ்ரீவிஜயதாஸரை நம்பிய மக்களான ஸ்ரீகோபாலதாஸர், ஸ்ரீஜகன்னாததாஸர் ஆகியோர் அவரை பின்பற்றி, அவர் சரணடைந்து, அதன் மூலம் அவர்கள் அடைந்த பெரும் பயன்களை நாம் பார்த்திருக்கிறோம்.

* ஸ்ரீதாஸரை நம்பியவர்களுக்கு என்ன கிடைக்கும் என்பதற்கு அவர் வாழ்க்கையில் நடந்த இன்னொரு சம்பவத்தையும் இங்கு பார்க்கலாம்.

ஸ்ரீதாஸர் சிப்பகிரியில் இருந்தபோது இந்த சம்பவம் நடந்தது. ஒரு முறை ஒரு விதவைப் பெண், தூரத்திலிருந்தே ஸ்ரீதாஸரை வணங்கி, தனக்கு அருளுமாறு வேண்டினார். அவள் பிராமண ஸ்த்ரீயாக இருந்தாலும், பிற ஜாதியினருடன் தொடர்பு வைத்து, தன் குலத்திலிருந்து விலக்கப்பட்டவள். பிறகு, அவளின் கணவன் இறந்துவிட, அவள் அனாதை ஆனாள். தன் பாவத்தின் பலனால் இவை நடந்தன என அவள் சுய பரிதாபம் கொண்டாள். இதற்கான பரிகாரத்தினை விரும்பி ஸ்ரீதாஸரிடம் வந்திருந்தாள். கருணாளுவான ஸ்ரீதாஸர், அவளுடைய அதித்வத்தை ஏற்றுக் கொள்ள நினைத்தார். அவள் கொடுக்கும் பதார்த்தங்களால் உணவு தயார் செய்து, ஸ்வாமிக்கு சமர்ப்பிக்க முடிவு செய்தார். பிறகு ஒரு நாளில், ஸ்ரீதாஸரின் மனைவி அரளம்மா அந்த சமையலை செய்தார். சித்ராஹுதி, பிராணாஹுதிகளுக்கு தேவையான அளவிற்கு மட்டும் ஏற்றுக்கொண்டு உணவினை சாப்பிட்டு முடித்தார்.

பிறகு அந்த பெண்ணை அழைத்து, அவளை தீர்த்தம் எடுத்துக் கொள்ளக் கூறினார். போஜன ஸேஷத்தை அவளுக்குக் கொடுத்தார். போஜனத்தை முடித்த அவள், இன்னொரு முறை ஸ்ரீதாஸரை வணங்கி, தன் நன்றியினை தெரிவித்து, உடனே தன் உயிரை நீத்தாள். தாசரின் ஆணைப்படி அவளின் இறுதிக் காரியங்கள் நடந்தேறின. அவள் நற்கதிக்குச் செல்லுமாறு அருளினார். அவள் முற்பிறவியில், சாபத்தைப் பெற்ற அப்சரஸ் பெண்ணாக இருந்தாள். ஸ்ரீதாஸரை வணங்கி, அவள் தன்னுடைய பாவங்களிலிருந்து விடுபட்டாள். அவளின் வாழ்க்கை அனைவருக்கும் ஒரு பாடமாக இருந்தது.

ஸ்ரீதாஸரை ஆராதிக்கும் மக்களைப் போல, தூஷிக்கும் மக்களும் இருந்தனர். ஸ்ரீஹரி வாயுகளை எதிர்க்கும் எண்ணிக்கையே அதிகமாக இருக்கும்போது, இன்னும் ஸ்ரீதாஸரின் த்வேஷிகள் இருப்பதில் வியப்பு எதுவும் இல்லை. ஸ்ரீதாஸரின் ஆளுமையை குறைப்பதற்கு காத்திருந்த அவர்கள், மேற்கண்ட சம்பவத்தை பயன்படுத்திக் கொள்ள முயன்றனர்.

அந்த காலத்தில் ஸ்ரீஉத்தராதி மடத்தின் பீடாதிபதியாக இருந்த ஸ்ரீஸத்யபோத தீர்த்தரிடம் ஸ்ரீதாஸரைப் பற்றியும், அவருடைய செயல்களைப் பற்றியும் தவறான அபிப்பிராயத்தை கூறினர். ஆனால், ஸ்ரீஸத்யபோத தீர்த்தருக்கு ஸ்ரீதாஸரைப் பற்றிய விஷயங்கள் ஏற்கனவே தெரிந்திருந்தது. ஆனால், துஷ்டர்களுக்கு புத்தி கற்பிக்கும் விதமாக, அவர் ஸ்ரீதாஸருக்கு ஒரு பஹிஷ்கார பத்திரத்தை எழுதிக் கொடுத்தார்.

அடுத்து ஒரு முறை, ஸ்ரீஸத்யபோத தீர்த்தரின் திக்விஜயம், சிப்பகிரிக்கு வந்தபோது, ஸ்வாமிகளைப் பார்க்க வந்த ஸ்ரீதாஸர், அவருடைய பஹிஷ்கார பத்திரத்தை மதித்து, தூரத்திலிருந்தே அவரை வணங்கினார். அப்போது ஸம்ஸ்தான பூஜை நடந்து கொண்டிருந்தது. அப்போது சமையலறையிலிருந்து கஞ்சி வெளிவந்து கொண்டிருந்தது. அதனைக் கண்ட ஸ்ரீதாஸர், உடனே கிருஷ்ணார்ப்பணம் என்றார். அடுத்து, நைவேத்ய காலத்தில் அந்த அன்னம் ஏற்கனவே நைவேத்தியம் செய்யப்பட்டது என்பதை ஸ்ரீஸத்யபோத தீர்த்தர் தம் க்ஞானத்ருஷ்டியினால் கண்டுகொண்டார். அது ஸ்ரீவிஜயதாஸரின் செயல் என்பதையும் அறிந்தார். அவருடைய மானஸ பூஜையின் ஸித்தி ஸ்ரீஸத்யபோத தீர்த்தருக்கு மிகவும் பிடித்தது. உடனே அதனை மக்களுக்கு

விவரித்து, பஹிஷ்கார பத்திரத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு சன்மான பத்திரத்தை கொடுத்து ஆசிர்வதித்தார்.

ஆகவே, ஸ்ரீதாஸரை நம்பியவர்களுக்கு நற்பலன்களே கிடைக்கும் என்பது நம் அனைவரின் மதமே ஆகும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை.

***

பாப கோடிய ராஶி லேபவாக$^{3}$தோ$^{3}$
தாப களெவனோ ப$^{3}$லு த$^{3}$யா பயோநிதி$^{4}$ ||6||

* நாம் வாழும் ஒவ்வொரு நாளும், நமது பாவங்களின் மலை மேலும் மேலும் உயர்ந்து கொண்டே போகிறது. நமது சாஸ்திரங்கள் கூறுவதாவது – ஒரே ஒரு பிறவியிலேயே, ஒவ்வொரு மனிதனும், இன்னும் பத்து பிறவிகளை ஏற்படுத்தக் கூடிய அளவு பாவங்களைச் சேர்த்துக்கொள்கிறான். இதை அதன் போக்கிலேயே விட்டுவிட்டால், இந்தச் சுழல் மிக விரைவில் கட்டுப்பாட்டை இழந்து, எண்ணிக்கையற்ற பிறவிகளாக விரிந்து செல்லும்; அதிலிருந்து வெளியேறும் வழியே இல்லாத நிலை உருவாகும்.

* அப்படியானால், இதற்கான தீர்வு என்ன?. இந்தப் பாவங்கள் அனைத்தும் பகவத் ப்ரஸாதத்தால் மட்டுமே அழிக்கப்பட முடியும். அந்த ப்ரஸாதத்தைப் பெற, சரியான க்ஞானத்துடன் இணைந்த பக்தி அவசியம். இவற்றைப் பெறுவதற்கு ஒரு தக்க வழிகாட்டியான குரு அவசியம்.

* ஸ்ரீவிஜயதாஸரே சொல்லியிருப்பதைப் போல, ஹரிகருணெ எம்பந்த கீலிகை தொரகிது, குருகருணெ எம்பந்த ஶக்தியிந்த - குரு கருணை என்னும் சக்தி இருந்தாலே, அதன் மூலம், ஹரி கருணை கிடைக்கிறது. குருவின குலாமனாகுவ தனக தொரெயதண்ண முகுதி - என்பது போல, குருகளின் அவசியம் / மகிமை குறித்து, பல்வேறு ஹரிதாஸர்களின் கீர்த்தனைகளை நாம் அறிவோம்.

* அதன்படியே, இந்த வரிகளிலும், ஸ்ரீவிஜயதாஸரை வணங்கினால், அவரது பாதங்களை சரணடைந்தால், ஸ்ரீஹரியின் ப்ரஸாதம் கிடைத்து, அதன் மூலம் பாவங்கள் அழிந்து, தாபத்ரயங்கள் தீர்ந்து, இறுதியில் அந்த தயா பயோநிதியின் (ஸ்ரீவிஜயதாஸர் & ஸ்ரீஹரி) கருணையால் மோக்ஷம் கிடைக்கிறது என்கிறார் ஸ்ரீஸுப்பண்ணாசார்யர்.

***

கவனரூபதீ$^{3}$ ஹரிய ஸ்தவன மாடி$^{3}$தா$^{3}$
பு$^{4}$வன பே$^{3}$டி$^{3}$தா$^{3}$ மாத$^{4}$வன நோடி$^{3}$தா$^{3}$ ||7||

நன்கு அர்த்தம் பொதிந்ததான, இனிமையான கானங்களால் (பத, ஸுளாதிகளால்) ஸ்ரீஹரியை ஸ்தோத்ரம் செய்தார். அந்த மாதவனை பார்த்து வணங்கி, மகிழ்ச்சியான நிலையை அடைந்தார்.

* அவருக்கு முன் வாழ்ந்த அனைத்து மகத்தான ஹரிதாஸர்களைப் போலவே, ஸ்ரீவிஜயதாஸரும் மனதை நெகிழச் செய்யும், ஆழமான பொருளுடைய, இனிமையான கீர்த்தனைகள் மூலம் இறைவனை வழிபட்டார். சுமார் 25,000 பத்யங்கள் அவருக்குச் சொந்தமானவை எனக் கருதப்படுகின்றன. இவற்றில், த்வைதத்தின் எந்த ஒரு அம்சமும்கூட அவர் விரிவாக விளக்காமல் விட்டதில்லை.

* மாதவன நோடித - என்றால், அவர் காசியில் ஒரு முறை மாதவனை தரிசனம் செய்தார் என்று மட்டும் அர்த்தம் கொள்ளக்கூடாது. ஸ்ரீதாஸர், தமது வாழ்நாளில், ஸ்ரீஹரியின் லீலைகளை, பல்வேறு முறை நேரடியாகக் கண்டு அனுபவித்தவர்.

* மூன்று முறை காசி யாத்திரை, நான்கு முறை காஞ்சி முதலான தீர்த்த க்ஷேத்திரங்களின் தரிசனம், அனேக ஆண்டுகள் திருப்பதியின் பிரம்மோத்ஸ்வ தரிசனம் முதலான பல பெருமைகளை இவர் கொண்டிருக்கிறார். தீர்த்த பிரபந்த க்ரந்தத்தின் மூலம் தீர்த்த க்ஷேத்திரங்களின் மகிமையை சம்ஸ்கிருதத்தில் தொகுத்த பெருமை ஸ்ரீவாதிராஜருடையது என்றால், அவற்றை கன்னடத்தில் க்ருதிகளாக இயற்றிய பெருமை ஸ்ரீவிஜயதாசருடையது ஆகும். கடிகாசல, மன்னூரு ஆகிய க்ஷேத்திர மகிமைகளை பௌராணிக பின்னணியில் இவருடைய க்ருதிகள் விவரிக்கின்றன. பற்பல அறியப்படாத புராதன வைஷ்ணவ க்ஷேத்திரங்களைப் பற்றியும் உள்ள இவருடைய க்ருதிகள் அபாரமானவை.

- ஸ்ரீவிஜயதாஸர் செய்த தீர்த்த க்ஷேத்ர யாத்திரைகளைப் பற்றி மிகவும் தன் ஒரு பாடலில் பாடியுள்ளார் ஸ்ரீஹயவதன விட்டல தாஸர்.

க$^{3}$ங்கா$^{3}$தி$^{3}$யாத்ரெ த்ரிவாரவு மாடி$^{3}$த$^{3}$ ஸ்ரீ
ரங்க$^{3}$ ஸேது\ யாத்ரெ பஞ்சவார
ஹிங்க$^{3}$தெ$^{3}$ ஸர்பகி$^{3}$ரி யாத்ரெ பரிமிதியில்ல
மங்க$^{3}$ள உடு$^{3}$பி அனேக நதி$^{3}$ய மிந்த$^{3}$ ||2||

***

ரங்க$^{3}$னெந்த$^{3}$னா ப$^{4}$வவு ஹிங்கி$^{3}$தெந்த$^{3}$னா
மங்க$^{3}$ளாங்க$^{3}$னா அந்தரங்க$^{3}$வரிதனா ||8||

ஸ்ரீரங்கன் ஒருவனே நம் அனைத்து ஸம்ஸார துக்கங்களிலிருந்து நம்மை விடுவிப்பவன் என்றார். அந்த ரங்கன் அனைத்து மங்களங்களையும் கொண்டிருப்பவன். அத்தகைய ஸ்ரீரங்கனை தன்னுடைய அந்தரங்கத்தில் ஸ்ரீதாஸர் நன்கு அறிந்திருந்தார்.

* மங்களாங்கன - க்ஞான, ஆனந்தங்களால் நிரம்பிய ஸ்ரீஹரியின் தேகம் அப்ராக்ருதமானது. அதாவது, பஞ்ச பூதங்களாலான நம் தேகங்களைப் போல அல்ல என்று அர்த்தம். மேலும், ஸ்ரீஹரி 'ஸ்வகதபேத விவர்ஜிதன்' அதாவது ஸ்ரீஹரிக்கும், அவனது தேக அவயவங்களும் எவ்வித பேதம் இல்லை.

* கலியுகதொளு ஹரி நாமவ நெனெதரெ, குலகோடிகளு உத்தரிஸுவோ ரங்கா... நரஜன்ம பந்தாக நாலிகெ இருவாக க்ருஷ்ணா என பாரதே.. என்று பல்வேறு பாடல்களில் ஹரிதாஸர்கள் பாடியிருப்பதைப் போல, ஹரி, நாராயண, ரங்கா என்று எப்போதும் கூறிக் கொண்டிருந்தால், அத்தகையவனுக்கு ஸம்ஸார துக்கம் என்பதே இல்லை.

* மங்களமயமான, அப்ராக்ருத தேகத்தைக் கொண்டிருப்பவனான ஸ்ரீஹரியினை தன்னுடைய மனதில், ஸிம்ஹாஸனத்தில் அமர்த்தி, தன் தேகத்தையே ஒரு ரதமாக, கோயிலாக அனுஸந்தானம் செய்து வாழ்ந்து வந்தவர் ஸ்ரீவிஜயதாஸர்.

* ஸந்த்யாவந்தனத்தில் வரும் மந்த்ரமான 'த்யேய: ஸதா, ஸவித்ரு மண்டல மத்யவர்த்தி, நாராயண, ஸரஸிஜாஸன, ஸக்ஜிவிஷ்ட: கேயூரவான், மகர குண்டலவான், கிரீடி, ஹாரி,

ஹிரண்மய வபு: த்ருத ஶங்க சக்ர: ... ' என்று, நம் இதய குகையில் ஸ்ரீஹரியை எப்போதும் இருப்பவனாக நினைக்க வேண்டும் என்பது கருத்து.

* ஸர்வோத்தமனான ஸ்ரீஹரியே நமக்கு கதி. அவன் ஸர்வவ்யாபியும்கூட. அனைத்து இடங்களிலும் இருப்பதைப் போன்று, நம் மனதிலும் இருக்கிறான் என்றும் இந்த வரிகளிலிருந்து அறிய வேண்டும்.

* ஸ்வமூர்த்திகண மத்ய ஸச்சிதானந்தைக
ரமெதரெயரிந்தலாலிங்கத்வதி |
கமலஜாதிகளிந்த துதிஸிகொள்ளுத ஹ்ருதய
கமலதொளகிருவ ஸ்ரீவிஜயவிட்டலன கண்டே
(அந்தரங்கத கதவு தெரெயதிந்து)

என்று ஸ்ரீவிஜயதாஸரே பாடியிருப்பதை, தன் இதய கமலத்தில் ஸ்ரீவிஜயவிட்டலனை கண்டேன் என்றதையே ஸ்ரீஸுப்பண்ணாசார்யர் இங்கு சொல்லியிருக்கிறார்.

* அந்தரங்கவரிதன - இதற்கு இன்னொரு அர்த்தமும் சொல்லலாம். ஸ்ரீஹரியின் உள்ளத்தை அறிந்தவர். அதாவது, கீதையில் ஸ்ரீகிருஷ்ணன் கூறியதற்கேற்பவே தன் வாழ்க்கை முழுவதும் நடத்திக் காட்டியவர். ஏனெனில், அவர் ப்ருகு முனிவராக முற்பிறவியில் இருந்தவர் என்பதை அறிவோம். அப்போது 'ஸ்ரீஹரியே ஸர்வோத்தமன், தூய்மையான பக்திக்கு தகுதியான ஒரே இறைவன்' என்று உலகிற்கு நிரூபித்தவர். அவரே தற்போதும் ஸ்ரீவிஜயதாஸராக வந்து, அதையே இங்கும் பின்பற்றினார் என்பதில் வியப்பு எதுவும் இல்லை.
காஶி நக³ரத³ல்லித்³த³ வ்யாஸ தே³வனா த³யவ
ஸூஸி படெ³த³னா உல்லாஸ தனத³லீ ||9||

காசியில் இருக்கும் ஸ்ரீவேதவ்யாஸரை வணங்கினார். அவரை வணங்கி, அவரின் கருணையைப் பெற்றார். அதனால் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார்.

* அன்றொரு நாள் அருணோதய காலம். அன்று தாஸப்பனின் ப்ராரப்தம் பரிகாரம் ஆகும் நாள். தூக்கத்தின் கடைசிப் பகுதியில் இருந்த தாஸப்பனுக்கு ஸ்ரீபுரந்தரதாஸரின் ரூபத்தில், ஸ்ரீலட்சுமி ந்ருஸிம்ஹ ஸ்வாமியின் தரிசனம் ஆயிற்று. தாஸப்பனின் கைகளைப் பிடித்து, கங்கையின் அடுத்த கரையில் இருந்த வ்யாஸகாசிக்கு அழைத்துச் சென்று, அங்கு தாஸப்பனுக்கு 'விஜயவிட்டலா' என்னும் அங்கிதத்தைக் கொடுத்தார். ஶாந்தி மந்திரத்துடன் வித்யையை அருளினார். சாஸ்திர செய்தியை உலகிற்கு எடுத்துச் சொல்லும் தீக்ஷையை அருளினார். மறுபடி அங்கிருந்த ஸ்ரீவேதவ்யாஸ ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்று, தாஸப்பனை ஸ்ரீவேதவ்யாஸ தேவரை வணங்கச் செய்து, அவர் மூலமாக அபயம் அளிக்கச் செய்தார். கையில் ஏழு தந்திகளைக் கொண்ட தம்பூரி, ஒரு ஜோடி தாள, ஒரு சிட்டிகெ மற்றும் கால் சலங்கைகள் மற்றும் ஒரு கோபாளபுட்டி ஆகியவற்றைக் கொடுத்தார். மறுபடி காசியின் கங்கைக் கரைக்கு திரும்பச் செய்தார். ஸ்ரீவிஜயதாஸரின் 'அந்தரங்கத கதவு தெரெயிதிந்து' என்னும் அருமையான க்ருதி, அவருடைய இந்த அற்புத மாற்றத்தை ஆவணப்படுத்துவதை கவனிக்க வேண்டும்.

அந்த சமயத்தில் தாஸப்பனுக்கு முழிப்பு வந்தது. அப்போது அவருக்கு ஆன மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை என்றானது. பகவந்தனின் அருளை ஊகிப்பதற்கும் அவருக்கு சாத்தியமே ஆகவில்லை. தன்னுடைய அனுபவத்தின் சான்றாக தம்பூரி ஆகியவை அங்கேயே இருந்ததைக் கண்டார். அதிஅற்புதமான தெய்விக நிலையில் தாஸப்ப ஹரிதாசனாக மாறியிருந்தார்.

ஸ்ரீஹரியின் சாக்ஷாத் அருளுக்கு பாத்திரர் ஆகி, 'ஸ்ரீவிஜயதாஸர்' என்று உலகப்புகழ் பெற்றார். பல நூற்றாண்டுகளைத் தாண்டியும், பகவந்தனிடம் அழைத்துச் செல்லும் தார்மிக பிரக்ஞையை மக்களிடம் மூட்டினார்.

- விஜயராயர பாதவ நீ பஜிஸி பதுகெலோ மானவா - என்று ஸ்ரீஶ்யாம ஸுந்தர விட்டல தாஸர் பாடியுள்ள பாடலில், ஸ்ரீவிஜயதாஸர் செய்த காசி யாத்திரை பற்றி இவ்வாறு பாடியுள்ளார்.

தா1ஸு ஸ்வப்னதொ3ளொந்து3 தி3ன ஸ்ரீ |
வ்யாஸ காஶிகெ3 தெரளித3 |
வாஸுதே3வன கண்டு3 நமிஸி |
லேஸு வரவ ஸ்வீகரிஸித3 ||4||

***

சிந்தெ ப்3யாடி3ரோ நிஶ்சிந்தராகி3ரோ
ஶாந்த கு3ருக3ளா பாத3வாந்து1 நம்பி3ரோ ||10||

ஆகவே, கவலைப்படாதீர்கள். அமைதியாக, த்ருப்தியுடன், மகிழ்ச்சியுடன் இருங்கள். அமைதியின் உருவமாக இருக்கும் நம் குருகளின் ஸ்ரீவிஜயதாஸரின் பாதங்களை வணங்கி, அதையே / அவரையே நம்பி இருங்கள்.

* கவலைப்படாமல், மகிழ்ச்சியுடன் இருக்கும் நிலை என்றால் அது மோக்ஷ நிலையே. குருகளான ஸ்ரீவிஜயதாஸரின் பாதங்களை வணங்கினால், மோக்ஷமே கிடைக்கும் என்று ஒரு அர்த்தம் சொல்லலாம்.

* முதல் பதத்தினை, இரு விதமாக சொல்லும் பாட-பேதம் உள்ளது. 'சிந்தெ பேடிரோ' அல்லது 'சிந்தெ ப்யாடிரோ' . இந்த இரண்டின் அர்த்தத்தையும் பார்க்கலாம். 'சிந்தெ பேடிரோ' . சிந்தெ = நற்சிந்தனை. ஸ்ரீஹரியைக் குறித்ததான நற்சிந்தனை. அதாவது, பக்தி. ஸ்ரீவிஜயதாஸரின் பாதங்களை சரணடைந்து, சிறந்த குருபக்தி செய்து, அதன் மூலம் ஹரிபக்தியை அவரிடம் வேண்டுவது. அடுத்து, 'சிந்தெ ப்யாடிரோ' . ஸ்ரீவிஜயதாஸரின் பாதங்களை சரணடைந்து, எவ்வித கவலையும் இன்றி இருங்கள். அவரே உங்களை நற்கதிக்கு இட்டிச் செல்வார்.

* நிஸ்சிந்தராகிரோ. இந்த பதத்திற்கும் இரு விதமான அர்த்தங்களை புரிந்து கொள்ளலாம். குருகளை அடைந்தபிறகு, உங்கள் ஸம்ஸாரிக கவலைகளை மறந்து, நிஸ்சிந்தராக இருங்கள் என்பது ஒரு அர்த்தம் என்றால், அத்தகைய குருகளை அடைந்தபின், அவர் மூலம் ஸ்ரீஹரியைக் குறித்தான க்ஞானம், அதன் மூலம் பக்தி, அதன் மூலம் பகவத் ப்ரஸாதம். பின் எவ்வித துக்கங்களும் / கவலைகளும் அற்றதான (நிஸ்சிந்த) நிலையான மோக்ஷம் கிடைக்கிறது என்கிறார் ஸ்ரீஸுப்பண்ணாசார்யர்.

இறுதியாக, இந்தப் பாடல் - ஸ்ரீவிஜயதாஸர் ஏற்கனவே இந்தச் சிந்தனையை மேற்கொண்டு, அதன் இறுதிப் பயனான அமைதியும் சாந்தியும் அடைந்துள்ளார் என்று நமக்கு உறுதி அளிக்கிறது.

***

கே2த3வாக3தோ3 நிமகெ3 மோத3வாஹுதோ3
ஆதி3தே3வன ஸுப்ரஸாத3வாஹுதோ3 ||11||

(அவ்வாறு செய்தால்), உங்களுக்கு எவ்விதமான துன்பமும், கஷ்டமும் வராது. உங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியே உண்டாகும். ஆதிதேவனான ஸ்ரீஹரியின் ப்ரஸாதமே உங்களுக்கு கிடைக்கும்.

கேத = துக்கம்; மோத = ஆனந்தம்; ஆதிதேவன் = மோக்ஷப்ரதனான ஸ்ரீநாராயணன்.

இந்த உலகில் அனைவரும் விரும்புவது இரு விஷயங்களை. 1). சுக ப்ராப்தி. 2). துக்க நிவ்ருத்தி. இது இஹ & பர இரண்டிற்கும் பொருந்தும். மோக்ஷம் இந்த இரண்டையும் சாதாரணமாகவே கொண்டிருக்கிறது. ஆகவே, இஹத்தில் (இந்த உலகத்தில்) இந்த இரண்டிற்கும் என்ன அர்த்தம் என்று பார்க்கலாம்.

துக்க நிவ்ருத்தி - இதனை மறுபடி இரு வகையாக புரிந்து கொள்ளலாம். ஸாம்ஸாரிக விஷயமான துக்க நிவ்ருத்தி & ஆன்மிக விஷயமான துக்க நிவ்ருத்தி. ஆன்மிக விஷயத்தில் துக்க நிவ்ருத்தி என்றால், அக்ஞானம் (அறியாமை), குறைவான பக்தி, குறைவான வைராக்கியம் - ஆகியவற்றின் நிவ்ருத்தி. அதாவது, க்ஞான, பக்தி, வைராக்யங்கள் வளர வேண்டும்.

சுக ப்ராப்தி - மேற்சொன்ன க்ஞான, பக்தி, வைராக்யங்கள் வளர்ந்து, அதனால் கிடைக்கக்கூடிய நற்பலன்கள். கடைசியாக பகவத் ப்ரஸாதம். அதிலிருந்து மோக்ஷம்.

இவை அனைத்தும், ஸ்ரீவிஜயதாஸர் போன்ற ஒரு தக்க சிறந்த குருகளின் திருவடிகளில் சரணடைந்தால் கிடைக்கின்றன என்று கூறுகிறார் ஸ்ரீஸுப்பண்ணாசார்யர்.

***

தாப தடெ³வனோ ப³ந்த³பாப கடி³வனோ
ஸ்ரீபதிய பாத³ த³ ஸமீப விடு³வனோ ||**12**||

தாப = தாபத்ரய = ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதெய்விக. அந்த குருகளான ஸ்ரீவிஜயதாஸர், உங்களின் கஷ்டங்களையும், தாபத்ரயங்களையும் தடுத்து நிறுத்துவார். உங்களுக்கு வந்ததான பாவங்களை கத்தரிப்பார் / தடுப்பார். ஸ்ரீபதியின் பாதங்களுக்கு அருகில் சென்று உங்களை விடுவார்.

ஸ்ரீமோகனதாஸர், ஸ்ரீஜகன்னாததாஸர் போன்ற நமக்குத் தெரிந்த நேரடி உதாரணங்களே இதற்கு ஸாக்ஷியாக இருக்கின்றன. இவர்களைத் தவிர, இன்று வரை, தனது கட்டெயில் இருந்துகொண்டு, ஸ்ரீவிஜயதாஸர் தனது எண்ணற்ற பக்தர்களுக்கு, ஸிஷ்யர்களுக்கு அவர்களின் தாபத்ரயங்களை போக்கி வருகிறார் என்பதை பல இடங்களில் படித்திருக்கிறோம். கேட்டிருக்கிறோம்.

இதற்கு சம்பந்தப்பட்ட, ஸ்ரீவிஜயதாஸர் வாழ்க்கையில் நடந்த ஒரு அரிய நிகழ்வை இங்கு பார்க்கலாம்.
ஒரு முறை திருப்பதி வெங்கடேசனை தரிசனம் செய்து, அஹோபல நரசிம்மனின் தரிசனத்திற்கான வழியில் ஸ்ரீவிஜயதாஸர், ஸ்ரீஶைலத்தின் மல்லிகார்ஜுனனின் தரிசனத்திற்கு சென்றார். வழியில் நடந்த ஒரு சம்பவம் விசித்ரமாக இருந்தது. சிஷ்யர்களுடன் இருந்த தாஸரின் முன்னால், ஒரு மிகப்பெரிய புலி கர்ஜித்தவாறு வந்து நின்றது.

சிஷ்யர்களுக்கெல்லாம் உயிர் பயமே வந்தது. ஆனால், ஸ்ரீதாஸர் போன்ற மகாத்மருடன் இருப்பதால் அவர்கள் பயப்படாமல் நின்றனர். சிஷ்யர்களுக்கு தைரியம் கூறிய ஸ்ரீதாஸர், ஸ்ரீந்ருஸிம்ஹ ஸ்தோத்திரத்தை சொல்லத் துவங்கினார்.

தனது முந்தைய பிறவியில் செய்த புண்ணியச் செயல்களின் காரணமாக, அந்தப் புலிக்கு தனது முந்தைய பிறவியின் முழு நினைவும் இருந்தது; மேலும், அந்தக் கொடிய வாழ்க்கையிலிருந்து விடுதலை பெறவே அது தவித்துக் கொண்டிருந்தது. ஸ்ரீவிஜயதாஸர், உண்மையான நிலையை விளக்கி, தன் சீடர்களை அமைதிப்படுத்தினார். அவர் இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, புலியின் கண்களில் கண்ணீர் இருப்பதை சிஷ்யர்கள் கவனித்தனர்.

பின்னர், ஸ்ரீவிஜயதாஸர் தன் தேவரப் பெட்டியை (தன் வழிபாட்டு மூர்த்திகள் இருக்கும் பெட்டி) தரையில் வைத்துக் கொண்டு, அஹோபில ந்ருஸிம்ஹரை வேண்டி ஒரு பிரார்த்தனையை செய்தார். அந்தப் புலியின் மீது கருணை காட்டுமாறு இறைவனை வேண்டினார். அதற்குப் பிறகு, அவர் மற்றும் அவரது சிஷ்யர்கள் சில அடிகள் பின்னோக்கி நகர்ந்தனர். அப்போது ஒரு அதிசயம் நிகழ்ந்தது. கண்களில் கண்ணீருடன், அந்தப் புலி அந்தப் பெட்டியைச் சுற்றி வந்து, தரையில் படுத்துக் கொண்டு, அந்த இடத்திலேயே உயிர் நீத்தது.

விஜயதாஸரின் அருளால், அந்தப் பிராமணனின் புலி வாழ்க்கை அன்றே முடிவடைந்தது! இல்லையென்றால், இதற்காக இன்னும் எத்தனை பிறவிகள் எடுக்க வேண்டும் என்பதை இறைவன் ஒருவனே அறிவான்.

ஸ்ரீமதாசார்யர் இரண்டாம் பதரி யாத்திரை சமயத்தில், இமாலயத்தில் சென்று கொண்டிருந்தபோது, தம் சிஷ்யரான ஸ்ரீசத்ய தீர்த்தரை சம்ஹரிப்பதற்கு வந்த புலி ரூபமான தைத்யனை தன் உள்ளங்கையாலேயே அடித்துக் கொன்ற விஷயம், மத்வவிஜயத்தின் குறிப்பினைக் கொண்டும் இங்கு நினைக்கலாம். ஸாதுகள், பக்தவத்ஸலர்கள் என்பதற்கு இதுவே உத்தம உதாரணம்.

***

க$^3$ங்கெ$^3$மிந்த$^3$ரெ மலவு ஹிங்கிதல்லதே$^3$
ரங்க$^3$னொலியனோ ப$^4$க்த ஸங்க$^3$தொ$^3$ரெயதே$^3$ ||13||

கங்கையில் ஒரு முறை குளித்தால், நம்மை சேர்ந்திருக்கும் பாவங்கள் குறையும் (என்பது உண்மைதான். ஆனால்..) ரங்கனின் அருள் கிடைக்க வேண்டுமென்றால், (கங்கையில் குளிப்பதோடு மட்டுமல்லாமல்) அவனின் பக்தர்களின் சங்கம் நமக்கு ஆகவேண்டும்.

***

வேத$^3$ஓத$^3$லூ ப$^3$ரிதெ$^3$ வாத$^3$மாட$^3$லூ
ஹாதி$^3$யாக$^3$தூ$^3$ பு$^3$த$^3$ர பாத$^3$ நம்ப$^3$தே$^3$ ||14||

வேதங்களை, சாஸ்திரங்களை படிப்பதால் மட்டுமே, அவை பலன்களைக் கொடுக்காது. (அதனுடைய பலன்கள் கிடைக்க வேண்டுமெனில்), கற்றறிந்த அறிஞர்களின் (குருகளின்) பாதங்களில் விழுந்து அவர்களை சரணடைய வேண்டும்.

***

லெக்கவில்லதா$^3$ தே$^3$ஶ து$^1$க்கி ப$^3$ந்த$^3$ரூ
து$^3$:க$^2$வல்லதே$^3$ லேஶ ப$^4$க்தி தொ$^3$ரெயதோ$^3$ ||15||
எந்தவொரு குறிக்கோளும் (பக்தியும்) இன்றி, பல்வேறு தீர்த்த யாத்திரைகளை செய்தாலும், அதனால் உங்களுக்கு துக்கமே (சோர்வு) வரும். பக்தி கிடைக்காது (வராது).

***

தா$^3$னமாட$^3$லூ தி$^3$வ்ய கா$^3$ன பாட$^3$லூ
க்ஞான தொ$^3$ரெயதோ$^3$ இவர அதீ$^4$னவாக$^3$தே$^3$ ||16||

தானங்களைக் கொடுப்பதாலும், பக்திப் பாடல்களைப் பாடுவதாலும் எவ்வித க்ஞானமும் வராது (கிடைக்காது). (அந்த க்ஞானம் வரவேண்டுமெனில்), அவர் குருகளான ஸ்ரீவிஜயதாஸரின் பாதங்களை சரணடைய வேண்டும்.

***

நிஷ்டெயாதகே^ கண்ட$^3$ கஷ்டவ்யாதகே
தி$^3$ட்ட கு$^3$ருக$^3$ளா பாத$^3$ முட்டி ப$^4$ஜிஸிரோ ||17||

ஏன் இவ்வளவு கஷ்டங்களை படவேண்டும்? (கங்கையில் குளிப்பது, தானங்களைக் கொடுப்பது..). மற்றும் அதனால் வரும் ப்ரச்னைகளை சந்திக்க வேண்டும்?. (இவற்றை விட) ஒரு சிறந்த குருகளின் பாதங்களை சென்று சேரலாம். அந்த குருகளின் பாதங்களைத் தொட்டு வணங்குங்கள்.

***

பூஜெ மாட$^3$லூ கண்ட$^3$ கோ$^3$ஜு பீ$^3$ளலு
பீ$^3$ஜமாதினா ப$^2$ல ஸஹஜ தொ$^3$ரெயது ||18||

வெறும் பூஜை செய்வதால், தேவையில்லாத காம்ய கர்ம சுழல்களில் சென்று விழுவதால், சாஸ்த்ர க்ரந்தங்களின் உண்மையான அர்த்தங்கள் நமக்குக் கிடைக்காது (புரியாது).

***

**ஸ்லோகங்கள் #13 முதல் #18க்கான விளக்கம்:**

இந்த ஆறு ஸ்லோகங்களும் ஒரே மாதிரியான கருத்தினைக் கொண்டிருப்பதால், இவை அனைத்திற்கும் சேர்த்து ஒரே விளக்கத்தை பார்க்கலாம்.

ஜீவர்கள் ஸ்ரீஹரியை மகிழ்விப்பதற்காக, க்ஞானத்தைப் பெறுவதற்காக, பக்தியை வளர்த்துக் கொள்வதற்காக, பல்வேறு புண்ணிய செயல்களை செய்கிறார்கள். இந்த ஸ்லோகங்களில் சொல்லியவாறு:

* கங்கையில் ஸ்நானம் செய்வது
* வேதங்களைப் படித்து, சாஸ்திர விவாதங்களில் ஈடுபடுவது
* புனித தலங்களுக்கு யாத்திரை செய்வது
* ஏழைகளுக்கு தானம் அளிப்பது
* விரதங்களை அனுஷ்டிப்பது
* பூஜைகள் செய்து, உடல்-மன ரீதியான துன்பங்களை ஏற்றுக்கொள்வது

இந்த ஸ்லோகங்களின் முதல் வரிகளில் இத்தகைய செயல்களை சொல்லிவிட்டு, அந்தந்த இரண்டாம் வரிகளில், தக்க பலன்களைத் தருவதற்கு அவை போதாது என்று சொல்லி, அதற்கான தீர்வினையும் ஸ்ரீஸுப்பண்ணாசார்யர் சொல்லியிருக்கிறார். அந்த தீர்வுகளை பார்ப்பதற்கு

முன்னர், இதையே ஸ்ரீஜகன்னாததாஸர், ஹரிகதாம்ருதஸாரத்தில் எப்படி சொல்லியிருக்கிறார் என்பதை பார்க்கலாம்.

தா4த்ரியொளகு3ள்ளகி2ல தீர்த்த2
க்ஷேத்ர சரிஸித3ரேனு பாத்ரா
பாத்ரவரிதன்னாதி3 தா3னவ மாடி3 ப2லவேனு |
கா3த்ர நிர்மலனாகி3 மந்த்ர
ஸ்தோத்ர படி2ஸித3ரேனு ஹரி ஸ
ர்வத்ர க3தனெந்த3ரியத3லெ தா கர்த்ரு எம்பு3வனு ||(10-14)

பரமாத்மனே அனைத்து இடங்களிலும் இருந்து கொண்டு, அனைத்து காரியங்களையும் செய்விக்கிறான் என்று அறியாமல், தானே ஸ்வதந்த்ரனாக அனைத்தையும் செய்கிறேன் என்று யார் நினைக்கிறாரோ, அத்தகையவர் பூமியில் உள்ள அனைத்து தீர்த்த க்ஷேத்திரங்களையும் சென்று பார்த்து விட்டு வந்தால்தான் என்ன?. தகுந்தவர்களுக்கு அன்னாதி தானங்களை செய்தும் என்ன பலன்?. ஸ்நானாதிகளை, மந்திர ஸ்தோத்திரங்களை சொல்லியும் என்னதான் பலன்? ஒன்றும் இல்லை என்று பொருள்.

- இதே கருத்துக்களையே ஸ்ரீஸுப்பாண்ணாசார்யர் தனது ஸ்ரீவிஜயதாஸர ஸ்தோத்ர ஸுளாதியிலும் விரிவாகக் கூறியுள்ளார்.

ஸாஸிர தே3ஶவு ஸாஸிர காலவு
ஸாஸிர பாத்ரரு ஈஸு ஒந்தி3ன கூடெ3
ஆஸெபி3ட3தெ3 பூஜெ ஏஸு மாடி3த3ரேனு
மீஸல மனதி3ந்த3 ஸ்ரீஶக3ர்பிஸத3லெ
காஶியெ மொத3லாத3 தே3ஶ திருகி3 வன
வாஸியாத3ரேனு லேஶ ஒலிய ஹரி
வாஸுதே3வ நம்ம வேணுகோ3பாலன்ன
தா3ஸ தொண்ட3ர தா3ஸனாக3த3வ ||4||

பக்தர்கள் செய்யும் மேற்சொன்ன செயல்களிலிருந்து தக்க பலன்களைப் பெறுவதற்கு, அந்தந்த காரியங்களை செய்துவிட்டு, பின்வருவனற்றையும் செய்ய வேண்டும் என்கிறார் ஸுப்பண்ணாசார்யர். அவை யாவை என்றால்:

* ஸ்ரீஹரியின் பக்தர்களின் சங்கம் நமக்கு ஆக வேண்டும்.
* கற்றறிந்த அறிஞர்களின் (குருகளின்) பாதங்களில் விழுந்து அவர்களை வணங்க வேண்டும்.
* பக்தி தேவை.
* குருகளின் (ஸ்ரீவிஜயதாஸரின்) பாதங்களை சரணடைய வேண்டும்.
* குருகளின் (ஸ்ரீவிஜயதாஸரின்) பாதங்களை தொட்டு வணங்க வேண்டும்.

**தக்க குருகள் என்றால் யார்?.**

ஸ்ரீமதாசார்யர் நிர்ணயித்துக் கூறிய தத்வவாதத்தின் அடிப்படைகளான ஹரி ஸர்வோத்தமத்வம், வாயு ஜீவோத்தமத்வம், ஜகத் ஸத்யத்வம், பஞ்ச பேதம், தாரதம்யம் ஆகியவற்றினை சாஸ்த்ரங்களை அத்யயனம் செய்து, அதன் யதார்த்த க்ஞானத்தை பெற்றவராக இருக்க வேண்டும். அந்த யதார்த்த க்ஞானத்தை உறுதியாக, அவற்றின் மேல் அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்டு, மற்றவர்களுக்கு சரியாக உபதேசம் செய்பவராக அவர் இருக்க வேண்டும். ஸ்வ-மத

ஸ்தாபன & பர-மத கண்டன விஷய க்ஞானத்தை அவர் பெற்றிருக்க வேண்டும். இவ்வாறாக இல்லாத, பல குழப்பங்களில் இருப்பவர்களான, ஸிஷ்யர்களை, நடைபயிலும் ஒரு குழந்தைக்கு பெற்றோர் கைபிடித்து உதவுவது போல, அவர்களை அரவணைத்து, விஷயங்களை கற்றுக் கொடுக்க வேண்டும்.

*** உண்மையான பக்தர்கள் என்றால் யார்?**

இதற்கு ஸ்ரீஜகன்னாததாஸரே 'ரங்க நின்ன கொண்டாடுவ மங்களாத்மர' என்னும் கீர்த்தனையில் மிகச் சிறந்த பட்டியல் ஒன்றை தந்துள்ளார். உண்மையான பக்தர்கள் என்றால் யார் என்று சொல்லி, அத்தகையவர்களின் சங்கம் நமக்குக் கிடைக்க வேண்டும் என்று ஸ்ரீஹரியை அவர் வேண்டுகிறார்.

**உண்மையான பக்தர்கள்:**

* ஸ்ரீஹரியைத் தவிர வேறு எந்த இறைவனையும் தாரதம்யத்தின்படியே அறிய வேண்டும்.
* ஸ்ரீஹரி செய்த நிஷ்காம உதவிகளை ஒருபோதும் மறக்க மாட்டார்.
* ஒரு நாளும் ஸ்ரீஹரியின் திருவடி சேவையை விட்டு விலக மாட்டார்.
* பர-தத்வம் தவிர வேறெதையும் அறிய மாட்டார்.
* பிறருக்குப் பார்ப்பதற்கு ஊமை–செவிடர்கள் போலத் தோன்றுவர்.
* வஞ்சகமான சிந்தனையில் ஈடுபட மாட்டார்.
* வெற்றி/தோல்வி, லாபம்/நஷ்டம், புகழ்/இழிவு, பயம்/தைரியம், இன்பம்/துன்பம், தங்கம்/மண் — இவை அனைத்தையும் சமமாகக் காண்பர்.
* விருப்பு–வெறுப்பு, புகழ்ச்சி–இகழ்ச்சி அனைத்தையும் ஸ்ரீஹரியின் அருளாகவே ஏற்றுக்கொள்வர்.
* ஆடம்பரமின்றி தனிமையில் உன்னை வழிபட விரும்புவர்.
* காலம், இடம், சூழ்நிலைக்கு ஏற்ற தர்ம செயல்களில் ஈடுபடுவர்.
* எந்தச் சூழ்நிலையிலும் தங்கள் தர்மத்தை விட மாட்டார்கள்.
* அரிஷட்வர்கம் (காமம், கோபம், லோபம், மோகம், மதம், மாத்ஸரியம்) இன்றி இருப்பர்
* சபிக்கவும் ஆசீர்வதிக்கவும் ஆற்றல் கொண்டவர்
* ஸ்ரீஹரியின் விஸ்வரூபத்தை எங்கும் காண்பர்
* உண்பதையே யாகமாகவும், உணவையே ஸ்ரீஹரிக்கான ஆஹுதியாகவும் காண்பர்
* ஸ்ரீஹரிக்கு அர்ப்பணிக்கப்படாத எதையும் ஏற்க மாட்டார்.
* மோக்ஷத்திற்கோ உலக சுகங்களுக்கோ ஆசைப்பட மாட்டார்.
* ஸ்ரீஹரியின் நாம அமுதத்தைப் பருகுவதே அவர்களுக்கு பேரின்பம்
* மனைவி, குழந்தைகளை ஸ்ரீஹரியின் வரமாகவே கருதுவர்
* ஸ்ரீஹரியை வெறுப்பவர்களுடன் தொடர்பு கொள்ளார்
* ஸ்ரீஹரியின் லீலைகளை நினைத்து, சிரித்தும் அழுதும் பரவசமடைவர்
* ஒருபோதும் மனதை ஸ்ரீஹரியிடமிருந்து விலக்க மாட்டார்கள்
* வறுமையையும் செல்வத்தையும் சமமாகவே நோக்குவார்கள்
* இவர்கள் ஸ்ரீஜகன்னாத விட்டலரின் உண்மையான பக்தர்கள் என்பதால் பேரருளைப் பெற்றவர்கள்.

இவ்வாறான குணநலன்களைக் கொண்டவர்களின் சங்கம் ஆகவேண்டும் என்றே ஸ்ரீஸுப்பண்ணாசார்யர் கடந்த 6 ஸ்லோகங்களின் மூலம் சொல்கிறார். இவை அனைத்தையும் கொண்டவரான ஸ்ரீவிஜயதாஸரின் சங்கம் நமக்கு ஆகவேண்டும் என்பது கருத்து.

***

ஸுரரு எல்லரு இவர கரவ பிடி$^{3}$வரோ
தரள ரந்த$^{3}$தீ$^{3}$ ஹிந்தெ$^{3}$ திருகு$^{3}$திப்பரோ ||19||

தேவர்கள் அனைவரும் இவருடைய கைகளை பிடிப்பதற்கு வருகின்றனர். சிறுவர்களைப் போல இவர் பின்னாலேயே சுற்றி வருகின்றனர்.

***

க்$^{3}$ரஹக$^{3}$ளெல்லவூ இவர்கெ$^{3}$ ஸஹாய மாடு$^{3}$தா
அஹோ ராத்ரிலீ ஸுக$^{2}$த$^{3}$ நிஹவ கொடுவவோ ||20||

அனைத்து க்ரஹங்களும் ஸ்ரீவிஜயதாஸருக்கு உதவி செய்கின்றன. இரவும் பகலுமாக அவருக்கு சுகத்தையே, மகிழ்ச்சியையே தருகின்றன.

***

**#19 & #20 ஸ்லோகங்களின் விளக்கம்**

ஸ்ரீ விஜயதாஸர், அவரது சமகாலத்தில் அனைவரின் பெருமதிப்பினையும் பெற்றிருந்தார் என்பதை நாம் அறிவோம். ஆனால், அவருக்கு தேவர்களின் உலகிலேயே மரியாதை இருந்தது. அதற்கான காரணமும் உண்டு.

ஸ்ரீவிஜயதாஸர் ப்ருகு முனிவரின் அவதாரம். தாரதம்யத்தில் அவர் 15ம் கக்ஷையைச் சேர்ந்தவர். அக்னிக்கு சமமானவர். கணபதி, குபேரன் போன்ற தேவர்களைவிட உயர்ந்தவர். இதைவிட முக்கியமான விஷயம் என்னவெனில், அவர் ஸ்ரீஹரியும் வாயுவும் நேரடியாக அருளிய ஒரு மகான் என்பதே. அதனால்தான், உயர்ந்த நிலை கொண்ட ஆன்மாக்களுக்கே கூட அவர்மீது தனிப்பட்ட பாசம் இருந்தது.

இதை விளக்கக்கூடியதான ஒரு நிகழ்வினை பார்ப்போம்.

அரளம்மா மற்றும் குடும்பத்தினரை காசி யாத்திரைக்கு அழைத்துச் செல்வதாக ஸ்ரீதாஸர் தீர்மானித்தார். அதற்காக தன்னை பின் தொடர்ந்து வந்த ஸ்ரீமோஹனதாஸரிடம் - இந்த யாத்திரையில் நீ வர வேண்டாம். இந்த பயணத்தால் அஶ்வத்த ந்ருஸிம்ஹனின் பூஜை தடைபட வேண்டாம். நீ இங்கேயே இருந்து இந்த பூஜை காரியங்களை பார்த்துக் கொள்' என்றார். பிறகு, ஸ்ரீமோகனதாஸரின் மனைவியான ஸீதம்மாவை தனிமையில் அழைத்து, விசேஷமாக மந்திரித்த மந்திராக்ஷதையைக் கொடுத்து இவ்வாறு கூறினார் ஸ்ரீதாஸர். 'அம்மா, நாம் இங்கு இல்லாதபோது ஒரு மிகப்பெரிய ஆபத்து வரவிருக்கிறது. நீ தைரியத்தை இழக்காதே. அந்த சமயத்தில் ஸ்ரீஹரிவாயுகுருகளை நினைப்பாயாக. நம் அருளும் உனக்கு எப்போதும் இருக்கிறது. ஆகையால் அந்த ஆபத்து பரிகாரம் ஆவது நிச்சயம்' என்றார்.

ஸீதம்மாவுக்கு இதன் அர்த்தம் முழுமையாக விளங்கவில்லை. ஆனாலும், அவரது அருள் இருக்கும் என்று கூறியதால் நம்பிகையுடன் இருந்தார். மற்றொரு சமயம், ஸ்ரீதாஸர் தனது ராமேஸ்வர யாத்திரையில் இருந்தபோது, பல மாதங்கள் ராமேஸ்வரத்திலேயே தங்கி, அரளம்மாவுக்கு மன நிம்மதி கிடைக்குமாறு செய்தார். ஸ்ரீராமரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட, மனோ நியாமகரான ருத்ரர், அதனுடன், ஸ்ரீமத்வாசார்யரின் சாதுர்மாதத்தினால் பவித்ரமாக

இருந்த அந்த க்ஷேத்திரத்தில் தினமும் அரளம்மாவிற்கு தத்வபோதனைகளையும் செய்தார். இவ்வாறு அவரின் புத்ரசோகத்தை மறப்பதற்கான பல்வேறு செயல்களை செய்தார்.

இங்கு சீகலபரவியில் ஸ்ரீமோஹனதாஸர் ஒரு நாள் மதியம் திடீரென்று மரணம் அடைந்தார். ஆரோக்யத்துடன் இருந்த அவரின் திடீர் மரணம் மக்களை துக்கத்தில் ஆழ்த்தியது. ஸீதம்மாவின் சோகத்திற்கு எல்லையே இல்லை. அவர்களுடன் இருந்த ஸ்ரீமோகனதாஸரின் தாயும் துக்கம் அடைந்தார். இந்த சமயத்தில் ஸீதம்மாவிற்கு, ஸ்ரீவிஜயதாஸர் பயணத்திற்கு புறப்படும் முன்னர் கூறிய விஷயங்கள் நினைவுக்கு வந்தன. உடனே அவர் பக்தியுடன் ஸ்ரீஹரிவாயுகுருகளை ஸ்ரீவிஜயதாஸரை சிந்தித்து வணங்கினார். 'மதுஸூதனனே மோததீர்த்தரே, விஜயராயரே' என்று அவர்களை விசேஷமாக வணங்கினார்.

பிணத்திற்கு ஒரு யாமத்திற்குள் தக்க சம்ஸ்காரங்களை செய்ய வேண்டும் என்பது விதி. ஆனால் ஸீதம்மா, மக்கள் யாரையும் அந்த உடலை தொடக்கூட விடவில்லை. சிறிது நேரத்திலேயே, அனைவரும் வியக்கும் வண்ணம், ஸ்ரீமோஹனதாஸர், தூக்கத்திலிருந்து எழுந்து வருபவரைப் போல எழுந்தார். அதே வேளையில் அங்கு கூட்டத்தில் இருந்த மோனப்பா என்னும் ஒருவர் இறந்து விழுந்தார். அந்த சமயத்தில், ஸ்ரீமோஹனதாஸர் இவ்வாறு ஸ்ரீவிஜயதாசரைக் குறித்து ஒரு க்ருதியை இயற்றிப் பாடினார்:

தந்தெ விஜயராய வ்யாள்யக்கெ
பந்த்யோ விஜயராய
ஹிந்தேஸு ஜன்மவு முந்தேஸு ஜன்மவு
ஒந்து திளியதெந்திகு என்னய ||ப

ஸூர்யன ஸுதனந்தெ அல்லி மஹ
ஷௌர்ய தூதரந்தெ
கார்யாகார்யவு திளியதெ நின்ன பரி
சார்யன எளெதரெ பார்யளு மொரெயிடெ ||1

அதே தைர்ய நோடி ஸுததி தா
ஹ்ருதய பத்த மாடி
மதுஸூதனனெ மோத தீர்த்தரென்
தோதரிதளொதரித்ள் விஜயராயரெந்து ||2

கரகளனெ கட்டி யெளெயுதிரெ
தொரெகளனெ முட்டி
ஸிரி மோஹன விட்டலன பதவ தோரி
தரிகெ தந்துபிட்டெ கருணாளுவெ என்ன ||3

நடந்ததை ஸ்ரீமோஹனதாஸர் மக்களிடம் விவரித்தார். தம்மை யமதூதர்கள் அழைத்துச் சென்று, யமன் முன்னால் நிறுத்தியபோது அங்கு குருகளான ஸ்ரீவிஜயதாஸர் வந்தார். மஹனீயரான அவரை ஸ்வத: யமதர்மனே மரியாதையுடன் வரவேற்றான். அவர் வந்ததன் காரணத்தைக் கேட்டான். 'தன் மகனான மோஹனின் ஆயுள் இன்னும் முடியவில்லை. அதற்குள் ஏன் அவனை அழைத்து வந்தீர்கள்?'. யமதர்மன் இதைப் பற்றி சித்ரகுப்தனிடம் கேட்டபோது 'ஆயுள் முடிந்தது

மோனப்ப என்பவருடையதே தவிர, மோஹனதாஸருடையது அல்ல. தூதர்கள் தவறுதலாக இத்தகைய தவறினை செய்துவிட்டார்கள்' என்றார்.

விஷயத்தை அறிந்த யமதர்மன், உடனே அந்த மோனப்பனை அழைத்து வரவும், ஸ்ரீமோஹனதாஸரை பூலோகத்திற்கு திருப்பி அனுப்புமாறும் உத்தரவிட்டார். இதன்படி, ஸ்ரீமோஹனதாஸர் திரும்ப உயிர்பெற்று வந்தார்.

இதனை அறிந்த மக்களுக்கு, ஸ்ரீவிஜயதாஸர் மேல் இருந்த பக்தி, மரியாதை ஆகியவை மேலும் அதிகரித்தது. ஸ்ரீமோஹனதாஸர் மற்றும் அவருடைய குடும்பத்தார்க்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. இந்த நிகழ்வு, பல அபரோக்ஷ க்ஞானிகளின் தேவர நாமாக்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒன்று. தேவர்களுக்கே ஸ்ரீவிஜயதாஸரின் மீது இருந்த ஆழ்ந்த மரியாதைக்கு இது ஒரு தக்க சான்றாகும்.

வ்யாதி$^3$ பா$^3$ரதோ$^3$ தே$^3$ஹ பா$^3$தெ$^4$ தட்டதொ$^3$
ஆதி$^3$தே$^3$வன ஸுப்ரஸாத$^3$வாஹுதோ$^3$ **||21||**

குருகளின் பாதங்களை அடைந்தவர்களுக்கு - எந்தவொரு வ்யாதியும் வராது; தேகத்திற்கு எவ்வித ப்ரச்னைகளும் வராது. மேலும், ஸ்ரீஹரியின் ஸுப்ரஸாதமான மோக்ஷமும் கிடைக்கும்.

இன்றைய காலகட்டத்திலும் தன்னை நம்பிய பக்தர்களை குருகளான ஸ்ரீவிஜயதாஸர் எப்படி அருள்கிறார் என்கிறார் ஸ்ரீஸீதாராம விட்டலதாஸர்.

ஶரணு ப$^3$ந்த$^3$ ஜனர கு$^3$ருவு –
கருணெயிந்த$^3$ காணுதிருவ
ஸ்மரணெ மாத்ரதி$^3$ந்த$^3$ ஒத$^3$கி$^3$ –
தரதி$^3$ தரதி$^3$ ஸலஹுதிருவ
கீர்தி சிப்பகி$^3$ரியது$^3$- ஸுகீர்தி சிப்பகி$^3$ரியது$^3$ ||4||

வ்யாதி பாரதோ, தேஹ பாதெ தட்டதோ - என்பதற்கு பல்வேறு விளக்கங்களை சொல்லலாம்.

* முன்பு குணப்படுத்த முடியாததாக கருதப்பட்ட பல நோய்களிலிருந்து, மக்களை குணப்படுத்திய நிகழ்வுகள் ஸ்ரீவிஜயதாஸரின் வாழ்க்கை சரிதத்தில் நிறைய கிடைக்கின்றன. உதாரணமாக, அவரது நெருங்கிய நண்பரும் ஸிஷ்யருமான பங்கநாமத ஸ்ரீதிம்மண்ண தாஸர், உயிருக்கு ஆபத்தான ஒரு நோயால் பாதிக்கப்பட்டு, தன் இறுதி நேரங்களை எண்ணிக் கொண்டிருந்தபோது, ஸ்ரீவிஜயதாஸர் அவரை முற்றிலும் குணப்படுத்தினார். இது நேரடியாக அவர் தன் ஸிஷ்யரை காப்பாற்றிய விதம் என்றால், தன்னுடைய இன்னொரு ஸிஷ்யரான ஸ்ரீகோபாலதாஸர் மூலம், ஸ்ரீனிவாஸாசார்யருக்கு (பிறகு ஸ்ரீஜகன்னாத தாஸர்) வந்த பேராபத்தினை காப்பாற்றி, அவர் மூலம் நமக்கு ஸ்ரீஹரிகதாம்ருதஸாரம் போன்றதான அற்புத க்ருதியையும் பெற்றுத் தருவதற்கு முக்கிய காரணமாக இருந்தார்.

* நேரடி ஸிஷ்யர்களை ஸ்ரீதாஸர் காப்பாற்றிய விதம் இவ்வாறென்றால், அவரின் காலத்திற்குப் பின் வந்த ஸிஷ்யர்களுக்காக / பக்தர்களுக்காக ஸ்ரீவிஜயதாஸர் இயற்றிக் கொடுத்ததே - ஸ்ரீதன்வந்திரி ஸுளாதி. இதனை பக்தியுடன் பாராயணம் செய்தால், மிகக் கடுமையான நோய்கள் கூட குணமாகும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

* தேகத்திற்கு வந்த 'வ்யாதி' ஒரு புறம் என்றால், இந்த பவ ரோகம் 'ஸம்ஸாரம்' என்பதே இன்னொரு கொடிய நோய். இதுவே அனைத்து துக்கத்திற்கும் காரணம். இந்த ஸம்ஸாரத்தில்

நமக்கு நான்கு வித தேகங்கள் வருகின்றன. ஸ்வரூப தேகம், லிங்க தேகம், ஸூக்ஷ்ம தேகம், ஸ்தூல தேகம். இந்த தேகங்களினால் நமக்கு வருவதான பாதைகள் (ப்ரச்னைகள்) வராது என்று கூறுகிறார் ஸ்ரீஸுப்பணாசார்யர். அதாவது, குருகளின் பாதகமலங்களில் சரணடைந்தால், ஆதிதேவனின் ப்ரஸாதம் கிடைத்து, அதன் மோக்ஷம் கிடைப்பதால், ஜீவிகளுக்கு மறுபடி ஸம்ஸாரம் எனப்படும் நோயும், அதனால் கிடைக்கக்கூடிய தேகங்களும், அவற்றிற்கு சம்பந்தப்பட்ட ப்ரச்னைகளும் வராது என்பதாக சொல்கிறார் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

***

பதித பாமரா மந்த$^{3}$மதியு நா ப$^{3}$லூ
துதிஸலாபெனெ இவர அதிஶயங்க$^{3}$ளா ||22||

மதி மயங்கியவன், படிக்காதவன், புத்தி குறைவானவன் (நான்) ஸ்ரீவிஜயதாஸரைப் பற்றி முழுவதுமாக அறியவில்லை. இவர் நிகழ்த்திய அதிசய அற்புதங்களை, இவருடைய மகிமைகளை என்னால் முழுமையாக விளக்கவும் முடியுமோ? (முடியாது).

ஸ்ரீவிஜயதாஸரின் பரம பக்தரான ஸ்ரீஸுப்பண்ணாசார்யர், தன்னையே தான் தாழ்த்திக் கொண்டு, ஸ்ரீவிஜயதாஸரின் மகிமையை முழுமையாக சொல்ல, அதற்கு நியாயம் செய்ய தமக்குத் தகுதி இருக்கிறதா என்று கேட்டுக் கொள்கிறார். ஏனெனில், ஸ்ரீவிஜயதாஸர் மிகமிக உயர்ந்த நிலையை அடைந்த ஒரு ஜீவன். சாதாரண மனிதர்களால் அவரது ஆளுமையின் வடிவத்தை முழுவதுமாக புரிந்து கொள்ள முடியாது. ஆகவே, தானும் அவரது மகிமைகளைப் பார்த்து வியக்க முடியுமே தவிர, விளக்க முடியாது என்று கூறுகிறார்.

‘மந்தமதி’ என்றால், மந்தமான புத்தி அல்லது மந்த சிந்தனை உடையவன் அல்லது தாழ்ந்த, இழிவான பொருட்களிலேயே மனம் ஈர்க்கப்பட்டு, அவற்றிலேயே உறைந்து கிடப்பவன் என்று பல அர்த்தங்களை கொள்ளலாம்.

***

கருணதி$^{3}$ந்த$^{3}$லீ எம்ம பொரெவனல்லதே$^{3}$
து$^{3}$ரித கோடியா பே$^{3}$க$^{3}$ தரிவ த$^{3}$யத$^{3}$லீ ||23||

குருவான ஸ்ரீவிஜயதாஸர் கருணையுடன் நம்மை இஹலோகத்தில் காப்பது மட்டுமல்லாமல், நம் கோடிக்கணக்கான கஷ்டங்களை உடனடியாக, கருணையுடன் தீர்த்தும் வைக்கிறார்.

ஸ்ரீவிஜயதாஸர் கருணையும் கனிவுமே வடிவமாக இருந்தவர். தன் வாழ்க்கையில் கடும் வறுமை, அவமதிப்பு, துன்பங்கள் ஆகியவற்றை நேரடியாக அனுபவித்திருந்ததால், மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை அவர் எளிதில் புரிந்து கொண்டு, உடனடியாகத் தீர்வுகளை அளித்தார். அவரிடம் சரணடைந்தவர்களுக்கு அவர் மறுத்ததென்றே இல்லை. யாரும் திருப்பி அனுப்பப்படவில்லை; யாரும் வெறுமைக் கையுடன் திரும்பிச் சென்றதில்லை. அவரது தாராள மனம், உலகியல் தேவைகளையும் ஆன்மிக தேவைகளையும் ஒருசேர உள்ளடக்கியது. இதை விளக்க, அவரது வாழ்க்கையில் நடந்த ஒரு அபூர்வ நிகழ்வை பார்க்கலாம்.

ஒரு வயதான, புனிதமான ப்ராஹ்மணர் ஒருவர், ஸ்ரீவிஜயதாஸரின் சிறந்த பக்தராக இருந்தார். ஒருமுறை, ஸ்ரீதாஸர் காசி யாத்திரை செல்லத் திட்டமிட்டபோது, தம் ஸிஷ்யர்களையெல்லாம் உடன் வருமாறு அழைத்தார். அந்த முதிய ப்ராஹ்மணர், அந்த சிறந்த சங்கத்துடன் அந்தப் புனித யாத்திரை செய்ய முடியாத தன் துரதிருஷ்டத்தை நினைத்து மிகுந்த மனவருத்தம் அடைந்தார்.

ஸ்ரீதாஸர் அவரது மன வேதனையை கவனித்து, காசியிலிருந்து திரும்பும்போது, அந்தப் ப்ராஹ்மணருக்காக கங்காஜலத்தை கொண்டு வந்தார். இதனால் அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்.

ஆனால், அவர் ஸ்ரீவிஜயதாஸரிடம், "எனக்கு ஆசீர்வாதம் அளியுங்கள்; குறைந்தபக்ஷம் அடுத்த பிறவியிலாவது, நான் நேரடியாக காசிக்குச் சென்று கங்கையில் ஸ்நானம் செய்ய வேண்டும்" என்று வேண்டினார். அந்தப் பிரார்த்தனையால் தாஸரின் இதயம் உருகியது. மேலும், அந்த ஊரில் இருந்த மற்ற முதிய மற்றும் உடல்நலக் குறைவு கொண்டவர்களுக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணமும் அவருக்கு ஏற்பட்டது.

சிறிது நேரம் சிந்தித்த பிறகு, ஸ்ரீதாஸர் இவ்வாறு கூறினார். "கங்கா ஜனகனுக்கு எதுவும் அஸாத்தியமல்ல. நாளை, சரியாக மதிய நேரத்தில், துங்கபத்ரா நதியில் கங்கை அவதரித்து, ஒரு மணி நேரம் அங்கே இருப்பாள். விருப்பமுள்ளவர்கள் நதியில் ஸ்நானம் செய்து, கங்காஸ்நானத்தின் பலனை அடையலாம்" என்றார்.

இதைக் கேட்ட அந்தப் ப்ராஹ்மணர், நன்றியுடன் கண்ணீர் மல்க, "தாஸரே, உங்கள் கருணை கடலின் ஆழம் போன்றது. உங்கள் அருள்மிகு சன்னிதி எங்களிடையே இருப்பது எங்களின் பாக்கியம். ஆனால் இந்தப் பாபியைப் பாருங்கள்; கங்கை எங்கள் ஊருக்கே வந்தாலும், நதிவரை நடந்து சென்று ஸ்நானம் செய்ய இயலாததால், நான் அந்தப் பாக்கியத்தை அனுபவிக்க முடியாதவனாக இருக்கிறேன்" என்று கூறினார்.

அந்த முதியவரின் நிலை, கங்காஸ்நானம் செய்ய வேண்டும் என்ற அவரது தீவிர ஆசை, தன் துரதிருஷ்டம் குறித்து கொண்ட உண்மையான வருத்தம் — இவை அனைத்தும் ஸ்ரீதாஸரின் உள்ளத்தை மேலும் உருக்கியது. அப்போது ஸ்ரீதாஸர் கூறினார்:

"ஆசார்யரே, நம் கங்கா ஜனகனின் கருணையின் உண்மையான அளவை நீங்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. அவருக்குச் 'பக்தவத்ஸலன்' என்ற பெயர் எவ்வளவு பொருத்தமானது என்பதையும். நீங்கள் நதிவரை வர முடியவில்லையா? பரவாயில்லை — கங்கை உங்களுடைய வீட்டிற்கே வருவாள். உங்கள் மருமகள், வீட்டின் மாடத்தில் இரண்டு பெரிய, காலியான வாளிகளை வைத்திருக்கட்டும். நாளை, துங்கபத்ராவில் கங்கை அவதரித்த பிறகு, சரியாக மதியம், அவள் உங்கள் வீட்டிற்கு வந்து, அந்த வாளிகளைத் தன் இருப்பால் நிரப்புவாள். அந்த நீரால் உங்களுக்கு ஸ்நானம் செய்து விடச் சொல்லுங்கள். நீங்கள் உண்மையிலேயே பாக்கியசாலி; ஸ்ரீலக்ஷ்மீபதி உங்கள்மீது இவ்வளவு கருணை கொண்டிருப்பதால், கங்கை தானே உங்கள் இல்லத்திற்கே வருகிறாள்."

அடுத்த நாள், தாஸர் கூறிய அதே நேரத்தில், அந்த இரண்டு வாளிகளும் நீரால் நிரம்பின. அந்தப் ப்ராஹ்மணர் அளவில்லா ஆனந்தத்தில் திளைத்தார். மனிதரால் சாத்தியமற்ற தடைகளைத் தாண்டி, கங்கையில் ஸ்நானம் செய்ய வேண்டும் என்ற அவரது கனவு நிறைவேறியது — அனைத்தும் ஸ்ரீவிஜயதாஸரின் கருணையால். அவர் கங்கையை ஊருக்கே மட்டுமல்ல; அந்தப் ப்ராஹ்மணரின் வீட்டிற்கே கொண்டு வந்தார்.

இது ஒரேயொரு உதாரணம்தான். இதைப் போன்ற, ஸ்ரீதாஸரின் கருணையை எடுத்துக் காட்டும் பல்வேறு சம்பங்களை அவரது வாழ்க்கையில் முழுக்க பார்க்கலாம். அதனால்தான், விஜயதாஸரின் அபூர்வமான ஆற்றலுக்கும் அளவிலா கருணைக்கும், சாதாரண மனிதர்கள்

நியாயம் செய்ய முடியாது என்று ஸ்ரீஸுப்பண்ணாசார்யர் கூறுவது முற்றிலும் பொருத்தமானதாகிறது.

***

மந்த³மதிக³ளு இவர செந்த³வரியதே³
நிந்தெ³மாட³லூ ப⁴வத³ப⁴ந்த³ தப்பதோ³ ||24||

மந்தமதிகளானவர்கள் ஸ்ரீவிஜயதாஸரின் மகிமைகளைப் பற்றி சரியாக அறியாமல், இவரை திட்டினால் / புறக்கணித்தால், அப்படிப்பட்டவர்களுக்கு ஸம்ஸார பந்தம் தப்பாது.

* பரம-பகவதரை (சிறந்த பக்தரை) விமர்சிப்பது மிகக் கொடிய பாவமாகும். இறைவனின் கோபத்தைத் தூண்டுவதற்கு இதைவிட எளிய வழி வேறு எதுவும் இல்லை. உண்மையில், தன் பக்தர்களை இகழ்வதையோ, துன்புறுத்துவதையோ இறைவன் சிறிதும் சகிப்பதில்லை. அது ஹிரண்யகசிபு போன்ற அசுரனாக இருந்தாலும் சரி, துர்வாசர் போன்ற தேவ ரிஷியாக இருந்தாலும் சரி — ஒரு பக்தனைத் துன்புறுத்துதல் (அல்லது துன்புறுத்த முயல்வது), உடனடியானதும் கடுமையானதுமான தண்டனையை அவசியம் அழைத்துக் கொண்டு வரும்.

* இதற்கு இன்னொரு சிறந்த உதாரணம்: அம்பரீஷ மஹாராஜா. ஒருமுறை ஒரு உண்மையான பக்தனை, யாராவது காயப்படுத்திவிட்டால், தேவர்கள்கூட அவரை காப்பாற்ற முடியாது — காப்பாற்ற விரும்பினாலும் முடியாது.

* ஸ்ரீனிவாஸாசார்யரும் (பிறகு, ஸ்ரீஜகன்னாததாஸர்), ஸ்ரீவிஜயதாஸரின் ஆளுமையைத் தெரியாமல் அவரை புறக்கணித்து, பின்னர் புரிந்து கொண்டு அவரை சரணடைந்த பிறகே, அவருடைய துன்பம் தொலைந்தது என்பதையும் நாம் பார்க்கிறோம். அவருக்கு, ஸ்ரீராயரே, ஸ்ரீவிஜயதாஸரிடம் செல்லுங்கள், உங்களுக்கு நலன் விளையும் என்று கூறினாரென்றால், பகவத் பக்தர்களின் சிறப்பினை என்னவென்று கூறுவது?.

* இவ்வாறெல்லாம் சொல்வதால், அதாவது, யாரொருவர் ஸ்ரீவிஜயதாஸரை திட்டினால் / புறக்கணித்தால் அவர்களுக்கு ஸம்ஸார பந்தம் தப்பாது என்பதால், அவர்களை ஸ்ரீதாஸர் சபிப்பார் / திட்டுவார் / தீங்கு செய்ய விரும்புவார் என்று அர்த்தம் இல்லை. அவர் அமைதியும் பொறுமையையும் கூடிய வடிவமாக திகழ்ந்தவர். கடுமையான தூண்டுதல்களையும் எதிர்கொண்டபோதும் அவர் அமைதியை இழக்கவில்லை. அவரை விமர்சித்தவர்கள், தாங்களே, தங்களுக்கு துன்பத்தை வரவழைத்துக் கொண்டார்கள். அது ஸ்ரீவிஜயதாஸரின் எந்தவிதமான எதிர்வினைகளாலும் இல்லை.

* தேஷாம் க்ஞானி நித்யயுக்த ஏகபக்திர் விஸிஷ்யதே |
ப்ரியோ ஹி க்ஞானினோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய: ||
(பகவத் கீதை 7-17)
என்று ஸ்ரீகிருஷ்ணனே சொல்லியிருப்பதற்கேற்ப, நான் க்ஞானிகளுக்கு மிகவும் பிடித்தவன். எனக்கும் அத்தகைய க்ஞானிகளை மிகவும் பிடிக்கும் - என்பதே இந்த வரிகளுக்கு மிகவும் பொருத்தமான / முக்கியமான ஆதாரம் என்று கூறலாம்.

***

இந்தி³ராபதீ இவர முந்தெ³ குணிவனோ
அந்த³வசனவா நிஜகெ தந்து³ கொடு³வனோ ||25||

பக்தவத்ஸலனான, இந்திராபதியான ஸ்ரீஹரி இவர்முன் வந்து ஆடுகிறான். ஸ்ரீவிஜயதாஸர் கூறிய வசனங்களை / வாக்குகளை, உண்மை ஆக்குகிறான்.

ஸ்ரீராகவேந்த்ர ஸ்தோத்திரத்தில் 'ஸாக்ஷி ஹயாஸ்தோத்ரஹி' என்று அந்த ஸ்தோத்திரத்தில் வந்த அனைத்திற்கும், ஹயக்ரீவனே ஸாக்ஷி என்று கூறியதைப் போல, இந்த ஸ்ரீவிஜயராயர கவசத்திலும், ஸ்ரீஸுப்பண்ணாசார்யர் கூறியுள்ள அனைத்திற்கும் அந்த இந்திராபதியே ஸாக்ஷி என்கிறார்.

அதாவது, ஸ்ரீவிஜயதாஸர் தாம் இந்த பூமியில் வாழ்ந்த காலத்திலேயே, அவர் கூறிய வாக்குகள் அனைத்தையும் அந்த இந்திராபதி உண்மையாக்கினான். அதையே, அவரது பூத உடல் நம்மிடையே இல்லையென்றாலும், சீகலபரவியில் ஸ்ரீதாஸர் தமது கட்டெயில் ஸூக்ஷ்ம ரூபத்தில் இன்றும் இருந்து, தன்னை நாடி வரும் பக்தர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வருகிறார். அவரது கஷ்டங்களைப் போக்குகிறார். இவ்வாறு அருள்வதற்காக ஸ்ரீதாஸர் கூறும் வாக்குகள் அனைத்தையும் அந்த இந்திராபதியே ஸாக்ஷியாக இருந்து நிறைவேற்றுகிறான் என்று இந்த வரிகளுக்கு அர்த்தம் புரிந்து கொள்ள வேண்டும்.

***

உத$^{3}$ய காலதீ$^{3}$ஈ பத$^{3}$வ படிஸலூ
மத$^{3}$ட$^{3}$னாத$^{3}$ரூ க்ஞான உத$^{3}$யவாகு$^{3}$தோ$^{3}$ ||26||

யாரொருவர் தினமும் உதய காலத்தில் இந்த பதத்தினை (ஸ்ரீவிஜயராய கவசத்தினை) படிக்கிறார்களோ, அவர்கள் ஒரு முட்டாளாக இருந்தாலும், அவருக்கு யதார்த்த க்ஞானம் உதயமாகும்.

* மதடனாதரோ க்ஞான உதய - ஸ்ரீஸுப்பண்ணாசார்யரின் சொந்த வாழ்க்கையில் நடந்த சம்பவமே இதற்கு தக்க உதாரணம் ஆகும். ஒரு முறை ஸ்ரீஸுப்பண்ணாசார்யரின், ஸ்ரீமன் ந்யாய ஸுதா மங்களத்தின் விழா நடந்து கொண்டிருந்தது. அந்த மங்கள காரியத்திற்காக சுற்றும் முற்றும் இருந்த கிராமங்களிலிருந்து வித்வாம்ஸர்கள் அங்கு வந்திருந்தனர். உடன், ஆத்திக மக்கள் பலரும் சேர்ந்திருந்தனர். மங்கள நாளன்று ராஜபக்ஷ்ய எனப்படும் மண்டிகெ சமர்ப்பணம் என்பது அந்த இடத்தின் மற்றும் அந்த காலத்தின் சிறப்பு வழக்கமாகும். மண்டிகெ பக்ஷ்யத்திற்கு சாக்ஷாத் ப்ரஹ்மதேவர் அபிமானி ஆவார். பா4வி ப்ரஹ்மரின் க்ரந்தமான அனுவ்யாக்யான மற்றும் அதன் டீகையான நியாயஸுதாவின் மங்களத்திற்கு மண்டிகெ முக்கிய பக்ஷ்யம் என்று அன்று மக்களின் நம்பிக்கை.

ஆகவே, அன்றும் மண்டிகெ செய்வதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால், அந்த மண்டிகெ செய்யும் சமையல்காரர் ஏதோவொரு தவிர்க்க முடியாத காரணத்தால் வரமுடியவில்லை என்று தகவல் சொல்லி அனுப்பிவிட்டார். இதனால் ஆசார்யருக்கு மிக்க கவலை உண்டானது. அவரது அதிர்ஷ்டமாக, நேரடியாக அழைப்பு இல்லாவிடிலும், ஸ்ரீவிஜயதாஸர் அங்கு வந்திருந்தார். ஆத்யாத்மிக நிகழ்ச்சிகளுக்கு இப்படி அழைப்பு இல்லையென்றாலும், செல்வது என்பது குணமே தவிர தோஷம் அல்ல என்பதே சாஸ்திரங்களின் வாக்கு.

விஷயம் அறிந்த ஸ்ரீதாஸர் தாமே மண்டிகெ பக்ஷ்யம் செய்வதற்கு தயாரானார். ஸ்ரீதாஸரை, சமையல்காரர் என்றே நினைத்து, ஆசார்யர், தமது பிரச்னை தீர்ந்தது என்று உடனே அதற்கு சம்மதம் தெரிவித்தார். ஸ்ரீதாஸர் தான் எதுவும் சமையல் செய்து பழக்கப்பட்டவர் அல்ல. ஆனால்,

இது ஒன்றும் சவாலான விஷயம் இல்லை என்று அவருக்கு தோன்றியது. தக்க நேரத்திற்கு முன்னரே, மண்டிகை காரியத்தை நிறைவேற்றி, தாஸர் மங்கள அனுவாதத்தைக் கேட்பதற்கு விரைந்தார். ஆசார்யரின் அனுவாத நிகழ்ச்சி துவங்கியது.

ஸ்ரீதாஸரின் சமையல்காரர் கோலத்தைப் பார்த்து அங்கிருந்த பலருக்கும் வியப்பு உண்டாயிற்று. அப்போதே அவரே ஸ்ரீவிஜயதாஸர் என்னும் சிந்தனை ஆசார்யருக்கும் உண்டானது. ஆனால், பிராரப்தத்தினால் வந்த கர்வத்தினால், அவருக்கு தக்க மரியாதை கொடுக்காமல், அவமானம் செய்தார்.

ஆசார்யரின் கர்வத்தைப் போக்கி, அவரை மேம்படுத்த வேண்டும் என்று ஸ்ரீதாஸருக்கு தோன்றியது. அனுவாதத்தின் ஒரு கட்டத்தில், அங்கு வந்த தண்ணீர் பரிமாறுபவனின் கைகளைப் பிடித்து, ஆசார்யரின் அனுவாதத்தை பற்றி மேலதிக விவரங்களைக் கூறுமாறு அவனிடம் கூறினார் ஸ்ரீதாஸர். உடனே அந்த சாதாரண மனிதன், ஸ்ரீஸுப்பண்ணாசார்யரைவிட அதிகமாக கற்றவனைப் போல, சரளமாக ஸுதா அனுவாதத்தை செய்யத் துவங்கினான். கல்லூர் ஸ்ரீசுப்பண்ணாசார்யரே அவனுடைய அனுவாதத்தைக் கேட்டு வியப்படைந்தார். ஆனால், ஸ்ரீதாஸர் தன் கையை எடுத்த உடனேயே, அந்த மனிதன் தன் அனுவாதத்தை நிறுத்திவிட்டு, மறுபடி சாமான்யனாக ஆனான்.

ஆசார்யரின் கர்வம் அழிந்தது. தாஸரின் அசாதாரண ஸித்தி தெரிந்து, வெறும் பாண்டித்யத்தைவிட அதிகமான பெருமை கொண்டவர் என்று புரிந்தது. ஸ்ரீதாஸரை பார்ப்பதற்கே யோசித்த ஆசார்யர், அவரது பார்வை தம் மேல் விழுந்தது என்று நினைத்து மகிழ்ந்தார். உடனே எழுந்து ஸ்ரீதாஸரின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து, தான் செய்த அவமானத்தை மன்னிக்குமாறு பலமுறை கேட்டுக் கொண்டார்.

* இதே சம்பவத்தை தனது விஜய கீதெ க்ருதியில் அழகாக பாடியுள்ளார் ஸ்ரீபீமகவி தாஸர்.
மத$^3$ட$^3$னிந்த$^3$லே | ஸுதெ$^4$ய நுடி$^3$ஸிதை$^3$
ஸுதெ$^4$ய ஸுப்$^3$ப$^3$னா | மத$^3$வ முரித$^3$னே
ஸத$^3$ய நீனலோ | புத$^4$ ஜனாக்$^4$ரணீ
ப$^4$ஜமனஸ் ஸதா$^3$ | விஜய கு$^3$ருவரம் ||4||

* உதய காலத்தில் இந்த பதத்தினை பாராயணம் செய்தால், க்ஞானம் மற்றும் அதனுடன் வரும் அனைத்து நன்மைகளும் கிடைக்கும் என்பது பொதுவான விளக்கம். ஆனால், அந்த அனைத்து நன்மைகள் என்ன என்றால், இங்கு முதல் பத்யத்திலிருந்து கடைசி வரை சொல்லப்பட்டவையே ஆகும். அவை என்னவென்றால்:

* துன்பங்கள் குறைதல் (பல்லவி)
* பெரும் தாராள மனப்பான்மை அடைதல் (பாடல் 2)
* தடைகள் தவிர்தல், மகிழ்ச்சி நிரம்புதல் (பாடல் 3)
* சம்சாரத்தின் சோதனைகளிலிருந்து விடுபடுதல் (பாடல் 5)
* பாவங்கள் குறைதல், துன்பங்களும் வலிகளும் நீங்குதல் (பாடல் 6)
* கவலை இல்லாத நிலை (பாடல் 10)
* துக்கமின்மை, நிரந்தர ஆனந்தம், ஸ்ரீ ஹரியின் அருள் (பாடல் 11)
* துன்பங்களும் இடையூறுகளும் தடுக்கப்படுதல், பாவங்கள் குறைதல், ஸ்ரீபதியின் திருவடிகளுக்கு நெருக்கம் (பாடல் 12)
* க்ஞானம் பெறுதல் (பாடல் 16)
* இரவும் பகலும் மகிழ்ச்சி (பாடல் 20)

* நோயின்மை, உடல் துன்பங்கள் இல்லாமை, ஸ்ரீ ஹரியின் அருள் (பாடல் 21)
* கருணைமிக்க பாதுகாப்பு, பிரச்சினைகள் குறைதல் (பாடல் 23)
* க்ஞானத்தின் உதயம் (பாடல் 26)

மேலே கூறப்பட்டவற்றிற்கு மேலாக, சுட்டிக் காட்டப்படாத (மறைமுகமான) பலன்களும் உள்ளன:

* ஸ்ரீ ஹரியின் அருள் பெறுதல் (பாடல் 13)
* தடைகள் நீங்குதல் (பாடல் 14)
* பக்தி கிடைத்தல் (பாடல் 15)
* க்ஞானம் அடைதல் (பாடல் 16)
* சாஸ்திரங்களின் உண்மையான பொருளைப் புரிந்துகொள்ளுதல் (பாடல் 18)

* உதய காலதி - என்பதற்கு இன்னொரு அர்த்தமும் சொல்லலாம். வெறும் காலை நேரத்தில் என்று மட்டுமல்லாமல், ஜீவனானவன், தன் அக்ஞான நிலையிலிருந்து உதயம் ஆகி, தக்க க்ஞானம் பெற வேண்டும், அதற்கு ஒரு குரு வேண்டும், அதற்காக ஸ்ரீவிஜயதாஸர் போன்ற ஒரு மகத்தான ஆன்மாவின் திருவடிகளில் சரணடைவோம் என்றெல்லாம் சிந்தனை செய்யத் துவங்கும்போது, இந்த பத்யத்தை படித்தால், மேற்சொன்ன அனைத்து பலன்களும் கிடைக்கும் என்று சொல்வதும் பொருத்தமானதே.

***

ஸடெ[1] இத[3]ல்லவோ வ்யாஸவிட்[2]ட[2]ல ப[3]ல்லனோ
படிஸ பஹுதி[3]தொ[3] கேளி குடில ரஹிதரு ||27||

மேலே ஸ்தோத்திரத்தில் & பல-ஸ்ருதியில் கூறியவை எதுவும் பொய் அல்ல. மிகைப்படுத்தி சொல்லியதும் அல்ல. அனைத்தும் உண்மையே. இதை நான் சொல்லவில்லை. ஸ்ரீவ்யாஸ விட்டலனே இதற்கு சாட்சி. ஆகவே அந்த ஸ்ரீவ்யாஸ விட்டலனின் ஸத்பக்தர்கள் அனைவரும் இந்த ஸ்தோத்திரத்தை கட்டாயம் படிக்க வேண்டும்.

இந்த ஸ்தோத்திரத்தில் கூறியுள்ள அனைத்திற்கும், கல்லூர் ஸ்ரீஸுப்பண்ணாசார்யரின் பிம்பரூபியான ஸ்ரீவ்யாஸ விட்டலனே சாட்சி என்று தெரிவிக்கிறார். அதாவது, ஸ்ரீவிஜயதாஸர் மீதி தூய்மையான பக்தியை செய்து, இந்த ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்தால், ஸ்ரீஹரியின் அருள் ப்ரஸாதம் கிடைக்கும். அதுவே மோக்ஷத்திற்கும் காரணம் ஆகும் என்கிறார். நாம் செய்ய வேண்டியது மிகக் குறைவே. ஆனால், கிடைக்கப் போவதென்னவோ அபாரமான, ஏராளமான பலன்கள்.

* இந்த விஜயராயர கவசத்தைப் பாடுபவர்களுக்கு ஸ்ரீஸுப்பண்ணாசார்யர் கூறிய பலன்கள் கிடைக்கும் என்பதை ஸ்ரீபீமகவி தாஸரும் தனது விஜய ஸுவ்வாலி பாடலில் இவ்வாறு உறுதி செய்கிறார்.

விஜயாக்[2]ய கவசம் - ப[4]ஜிஸிவாடு[3]வ ஜனகெ
நிஜவெந்த[3] விஜய ஸுப்[3]ப[3]ண்ண - ஸுப்[3]ப[3]ண்ண
நுடி[3]தந்தெ ப[4]ஜிஸோரு ஜனரு விஜயார்ய ||10||

ஆகவே, நம் அனைவரின் உத்தாரத்திற்காக, ஸ்ரீவிஜயதாஸரை நேரடியாகக் கண்டு, அவரது மகிமைகளை பார்த்து, வியந்து, போற்றி, பலன் பெற்ற ஸ்ரீஸுப்பண்ணாசார்யர் இயற்றிய இந்த ஸ்ரீவிஜயராயர கவசத்தை பாராயணம் செய்து நற்பலன்களைப் பெறுவோமாக.

*

'ஸ்ரீபதி தயதிம் விஜயார்ய' என்னும் ஸ்ரீவிஜயதாஸ ஸ்மரண க்ருதியில், ஸ்ரீபீமகவி தாஸர் பாடியுள்ளதைப் போல, ஸ்ரீவிஜயதாஸரின் ஸ்மரணையை நிரந்தரமாக செய்வோமாக.

'வீ'யெனெ விமலதெ விஜயார்ய
'ஜ'யெனெ ஜயவை விஜயார்ய
'ய' எனெ யாக$^{3}$ ப$^{2}$ல விஜயார்ய
'ரா' யெனெ ராஜ்யப்ராப்தியு விஜயார்ய
'ய' யெனெ யமப$^{4}$ய விஜயார்ய
தூ$^{3}$ரவாகு$^{3}$வுது$^{3}$ விஜயார்ய

**ஸ்ரீக்ருஷ்ணார்ப்பணமஸ்து.**

***

## ஸ்ரீவிஜயதாஸர மஹிமெ ஸுளாதி
## ஸ்ரீஶ்யாம ஸுந்தர விட்டலதாஸர் இயற்றியது

த்ருவ தாள
நிஷ்டியிந்தலி மன முட்டி பஜிஸு விஜய |
விட்டல தாஸர | மனவே நித்ய | எஷ்டு
ஹேளலி இவர | உத்க்ருஷ்ட மஹிமே க்ருபா |
த்ருஷ்டி யிந்தலி நோடி | தா க்ஷணதி |
ப்ரஷ்ட மனஸினிந்த | பிட்டு தர்மா சரணே |
துஷ்ட க்ருத்யவ கைத | தோஷதிந்த |
தட்டித துரிதெளெளக4 | மொட்யகளெல்லவு |
ஸுட்டு பஸ் மீ புத | வாத பளிகா |
புட்டி ஸுஜ்ஞான பக்தி | வைராக்ய பரிதராகி |
மெட்டுவரோ கை | வல்ய பதவ
ஸ்ருஷ்டி ஸம்ஹார கர்த்தாரித்தல்லிபோகி
சிட்டினிந்தலி கொட்டு | ஶாபவன்னு |
தட்டனே வைகுண்ட | பட்டணக்கெ தெரளி
பட்டதரஸியாத | லகுமீ ஸஹிதா
ஸ்ருஷ்டாண்ட பா4ர ஶிரதி | இட்டந்த ப2ணி பதிய
பட்ய பர்யங்க தல்லி | பவளிசிப்பா
திட்ட மூருதி ஶ்யாம | ஸுந்தரவிட்டலகே
பெட்டு ஹாகித பரம | கெட்டிகரோ இவரு ||

விளக்கவுரை:

தினமும் சுத்த மனதுடன், ஸ்ரீவிஜய விட்டலனின் அருள் பெற்ற ஸ்ரீவிஜய தாஸரை பஜிக்க வேண்டும்.

ஸ்ரீவிஜயதாஸரின் மகிமை என்னவென்றால், இவர் கண் திறந்து பார்த்து, நம் மீதி அருள் செய்தால், அந்த க்ஷணமே துஷ்ட மனதினால் நாம் செய்த தவறுகள், தர்மத்தை விட்டதால், ஆசரணைகளை விட்டதால், நமக்கு வந்த தோஷங்கள் சுட்டு பஸ்பம் ஆகிவிடுகிறது.
தோஷங்கள் போய் விடுவதால் வைராக்கியம் வருகிறது. பக்தி, ஸுக்ஞானம் பிறக்கிறது. மோக்ஷ பதவியையும் எட்டிவிடலாம்.

ஸ்ரீவிஜயதாஸர் தேவரிஷிகளில் ஒருவரான ஸ்ரீப்ருகு மஹரிஷியின் அம்சம். ரிஷிகள் யாகம் செய்தபோது, முதல் மரியாதை யாருக்கு செய்ய வேண்டும் என்ற ப்ரச்னை தோன்றவே, தான் அறிந்து வருவதாக, ஸ்ரீப்ருகு ரிஷி புறப்படுகிறார்.

ஸ்ருஷ்டி கர்தா ப்ரஹ்மாவின் ஸத்ய லோகம் போய், அங்கு சரஸ்வதியிடம் பேசிக் கொண்டிருந்த ப்ரஹ்மாவை பார்க்கிறார். ஆனால் பேச்சு ஸ்வாரஸ்யத்தில் ப்ரஹ்மா ப்ருகு ரிஷியை கவனிக்காமல், மரியாதை கொடுக்காமல் அலக்ஷியம் செய்கிறார். இதை கவனித்த ப்ருகு ரிஷிக்கு கோபம் வந்து, சாபம் கொடுத்துவிட்டு, கைலாயம் செல்கிறார். கைலாயத்தில்

சக்தியுடன் சிவன் ஆனந்தமாக பேசிக் கொண்டிருந்தார். ரிஷியை கவனித்து மரியாதை செய்யவில்லை. இங்கும் உடனே கோபமுற்ற ப்ருகு ரிஷி, சிவனையும் சபித்து விடுகிறார்.

உடனே அங்கிருந்து கிளம்பி வைகுண்டத்திற்கு வந்து பார்க்கிறார். படைக்கப்பட்ட இப்ப்ரபஞ்சத்தின் பாரத்தை, ஸகல உலகின் பாரத்தை தலையில் தாங்கும் ஆதிஸேஷனை படுக்கையாகக் கொண்டு, பட்டத்தரசியான லகுமி கால்களை வருட, அழகாகப் படுத்திருந்த நிலையில், ஸ்ரீவிஷ்ணுவை ப்ருகு ரிஷி போய் பார்க்கிறார். ஸ்ரீவிஷ்ணுவும், ரிஷி வந்ததை கவனிக்காததால், ரிஷிக்கு கோபம் வந்து, ஸ்ரீவிஷ்ணுவின் மார்பில் தம் காலால் உதைத்து விடுகிறார்.

உடனே ஸ்ரீவிஷ்ணு ரிஷியின் காலை பிடித்து வருடுகிறார். ஏன் தெரியுமா?. ப்ருகு மஹரிஷியின் காலில் மூன்றாவது கண் இருக்கிறது. அதனால் மிகவும் கர்வம் கொண்டிருந்தார். அந்த கர்வத்தை ஒடுக்கவே பகவான், அவருடைய உதைத்த காலை பிடித்து வருடி, காலில் இருந்த கண்ணை சாந்தமாக மூடி விடுகிறார். ரிஷிக்கு கோபம் அகன்று விடுகிறது. ரிஷியிடம் சாந்தமாகவே இருந்தார் ஸ்ரீவிஷ்ணு. (அந்த ப்ருகுவின் காலில் அதுலன் என்ற அரக்கன் வாஸம் செய்தான். விஷ்ணு அவனை அழித்தார். அது தான், ப்ருகுவின் காலில் இருந்த கண்ணை ஸ்ரீவிஷ்ணு அழித்ததற்கு காரணம்).

மறுபடி, ப்ருகு மஹரிஷி, யாகம் நடக்கும் இடத்திற்கு வந்து, முதல் மரியாதை ஸ்ரீவிஷ்ணுவிற்கே, விஷ்ணுவே ஸர்வோத்தமன் எனக் கூறுகிறார். முதல் பூஜைக்கு உரியவர், ஸ்ரீவிஷ்ணுவே, ஹரியே ஸர்வோத்தமன் என்று தெரிவிக்கிறார்.

தன் வாசஸ்தலமான விஷ்ணுவின் மார்பில் ப்ருகு ரிஷி உதைத்ததால், கோபம் கொண்ட ஸ்ரீமஹாலக்ஷ்மி, விஷ்ணுவை விட்டு கொல்லாபுரத்திற்கு வந்து விடுகிறார். அது தொடர்பாக, ஸ்ரீவிஷ்ணு பகவான் ஏழுமலைக்கு வந்து திருவேங்கடம் உடையான், ஸ்ரீனிவாஸனாக கலியுகத் தெய்வமாக திருப்பதியில் எழுந்தருள்கிறான். ஸ்ரீனிவாஸன் திருமலையில் இருப்பதற்கே காரணமான, ப்ருகு முனிகளே, ஸ்ரீவிஜயதாஸர். ஸத்யமூர்த்தி ஸ்ரீ்ஶ்யாம ஸுந்தர விட்டலனையே தம் பாதத்தினால் உதைத்த பரம கெட்டிக்காரர் இவர்.

(ஆகாஶ ராஜனின் மகளான ஸௌபாக்யவதி பத்மாவதியை மணம் புரிகிறார் ஸ்ரீனிவாஸன். கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக திருப்பதியில் ஸ்ரீனிவாஸனாக விளங்குகிறார் ஸ்ரீமஹா விஷ்ணு).

2. மட்ய தாள

எரடனே யுகதல்லி | ஸுரலீலனு எம்ப |
தருசர ரூபதலி | தரணி குலோத்பவன |
சரணவ ஸேவிஸி | கருண ஸம்பாதிஸிதா |
மரளே நிகம்பா நா | மதலி த்வாபர | தலி புட்டி |
யாதவ நெனிஸித | ஹலுஹலேனு மத்தே |
சரணஜ குலதல்லீ | தரிஸூத்த ஜன்மவனு |
ஸிரி ஶ்யாம ஸுந்தர | விட்டலனங்க்ரிய |
ஶரதனுவிகே ஹுட்டி | குறி நோடியஷதா |

இரண்டாம் யுகமான த்ரேதா யுகத்தில், ஸ்ரீராமாவதார சமயம். ஸ்ரீராமன் ராவணனுடன் போரிட்ட சமயம். சமுத்ரத்தைத் தாண்ட ஸேது அணை கட்டி ஸமுத்ரத்தை தாண்டினர். ஸ்ரீராமரும் வானர சேனையும், ஸுர லீலா என்னும் வானர வீரன், ஸேது அணை கட்ட உதவுகிறான். ஸுரலீலா என்னும் வானர வீரனாகப் பிறந்து, ஸ்ரீராம சேவை செய்திருக்கிறார் ஸ்ரீவிஜயதாஸர்.

அணை கட்டும்போதும், போரின்போதும், ஸுரலீலா என்னும் வானர வீரனாக, ஸ்ரீராம சேவை செய்து, இறைவனின் கருணையை சம்பாதித்திருக்கிறார் ஸ்ரீவிஜயதாஸர்.

மறுபடி, த்வாபர யுகத்தில் நிகம்ப என்னும் யாதவனாக கோகுலத்தில் பிறக்கிறார். க்ருஷ்ண அவதார காலத்தில் நிகம்ப என்னும் யாதவனாக பிறந்து, க்ருஷ்ண சேவை செய்கிறார். மறுபடி ஜரா என்ற வேடனாகப் பிறந்து ஸ்ரீஶ்யாம ஸுந்தர விட்டலனின் பாதங்களை (ஸ்ரீகிருஷ்ணனின் பாதங்களை) மான் என்று நினைத்து வில்லில் குறிவைத்து அம்பு எய்து விடுகிறார். காந்தாரியின் சாபம் காரணமாக, யாதவ குலமே அழிந்துவிடுகிறது. யாதவ குலம் முழுமையாக அழிந்தவுடன், ஸ்ரீகிருஷ்ணன் கடைசியாக ஒரு மரத்தின் கீழ் ஓய்வெடுத்து படுத்திருந்தபோது, கிருஷ்ணனின் பாதம், ஒரு மான் போல தோன்றவே, ஜரா என்னும் வேடன் வெகு தூரத்திலிருந்து அம்பு எய்கிறார். ஜரா வேடனாகப் பிறந்தவரும், ஸ்ரீவிஜயதாஸர், ஸ்ரீகிருஷ்ணன் மறுபடி வைகுண்டம் போய் விடுகிறார். வேடனுக்கு கட்டளையிட்டதும் ஸ்ரீகிருஷ்ணனே.

3. த்ரிவிட தாள

புன: கலியுகதல்லீ | அனுபம ஸன்மஹிமா |
அனிமிஷா நாமாக்ய | தாஸார்யரா |
மனயலிகோ வத்ஸ | வெனிஸி லாலிஸி
ஹரிய | குண கர்ம கீர்த்தனே | ஸ்ரவண கைதா |
கன புண்யதிம் பஶு | தனவு போகாடுத்த |
தனயராகி அவர | பளயலித்து |
முனி மத்வ பதி எம்ப | பெஸரினிந்தலி ஸதா |
மினகுலரொட கூடி | கவனதிந்தா |
அனனுத ஸ்ரீஶ்யாம | ஸுந்தர விட்டலன |
மனதி கொண்டாடுத்த | அனுக்ரஹ படெதரூ ||

விளக்கவுரை:

பிறகு கலியுகத்தில் ஸ்ரீனிவாஸ நாயக் (ஸ்ரீபுரந்தர தாஸரின்) வீட்டில் பசுமாட்டின் கன்றாக அவதரித்து, தாஸரின் ஹரி நாம ஸங்கீர்த்தனைகளை கேட்டு அனுபவிக்கிறார் ஸ்ரீவிஜயதாஸர். ஹரியின் கீர்த்தனைகளை, குண நாமங்களை ஸ்ரவணம் செய்த புண்ணியத்தினால், அடுத்த பிறவியில் குரு மத்வபதி என்று ஸ்ரீனிவாஸ நாயக்கின் மகனாகப் பிறக்கிறார். பகவானின் லீலையினால், நாரத அம்சமான ஸ்ரீனிவாஸ நாயக், ஸ்ரீபுரந்தர தாஸரக மிகப்பெரிய தாஸ ஸ்ரேஷ்டராக ஆகிறார்.

குரு மத்வபதி, அவருடனே இருந்து, ஸ்ரீஹரியை மனதில் இருத்தி கொண்டாடி வாழ்கிறார். ஸ்ரீஹரியின் அருள் கிடைத்ததால், நல்ல ஆன்மிக ஜ்ஞானத்துடன் மத்வபதி, தந்தையின் ஹரி நாம ஸங்கீர்த்தனைகளிலும் கலந்து கொண்டு, அவருடைய கீர்த்தனைகளை எழுதி வைத்தும் வாழ்கிறார்.

ஸ்ரீபுரந்தரதாஸரின் புதல்வர்களில் மத்வபதி முக்கியமானவர். ஒரு சமயம், மகன் மத்வபதியை அழைத்து, ஸ்ரீதாஸர் தாம் ஐந்து லக்ஷம் பாடல்களை ஸ்ரீஹரிக்கு சமர்ப்பணம் செய்ய உறுதி கொண்டதாகவும், தனது வாழ்நாளில் 4,75,000 கீர்த்தனைகள், ஸுளாதிகள், உகாபோகங்கள் ஆகியவற்றையே சமர்ப்பிக்க முடிந்ததாகவும் கூறினார். மீதியுள்ள 25,000 பாடல்களை மத்வபதி இயற்றி, தந்தையின் லக்ஷியத்தை நிறைவேற்ற வேண்டும் என கூறினார்.

ஸ்ரீவிஜயவிட்டலனின் அருள் இருந்தால், மீதி பாடல்கள் இயற்றி நிறைவு செய்வேன் என்று மத்வபதி கூறினார். மத்வபதியே மறுஜன்மத்தில் ஸ்ரீவிஜயதாஸராக அவதரித்தார் என்பது ஹரிதாஸர்களின் நம்பிக்கை. ஸ்ரீபுரந்தரதாஸர் & ஸ்ரீவிஜயதாஸர் இருவரும் சேர்ந்து மொத்தம் 5 லக்ஷம் க்ருதிகளை இயற்றி பகவான் ஸ்ரீனிவாஸனுக்கு அர்ப்பணம் செய்தார்கள் என்பதே உலக வழக்கு.

4. அட தாள

க்ஷிதியொளு மானவி | ஸீமகெ ஸேரித |
க்ஷிதிதர தேவன | ஸுதெய ஸுதீரதி |
க்ஷிதி ருஹவர நர | ஹரிய ஸான்னித்யதி |
அதிபுண்ய கர புட்ட | பதரி க்ஷேத்ரதி
ஸதி ஶிரோமணியாத | கூஸம்மனுதரதி |
ஸுதனாகி ப்ரதி தின | ஶஶியெந்தெ பெளெயுத்த |
அதிஶய தாரித்ர | வெதயு ஆவரிஸலூ |
கதிலேஶ வாகதே | ஸுகிஸுத்த ஶாந்ததி |
மதியிந்த மனதொளு | யோசிஸி முந்தண |
கதி காகி தா போகி | வாரணாஸியலி |
பதிதருந்த்தரிஸுவ | ஸுர நதியலி மிந்து |
சிதமனதவராகி | இருதிரல் ஒந்தின |
ஸ்துதிஸுத ஹரி பாத | மலகிரே ஸ்வப்னதி |
ஶத த்ருதி நந்தன | கரதைய்தா சிதே இப்ப |
க்ருத பூஜே ததியிந்தா | நுதனாத ஸ்ரீஸுக |
பிதனங்க்ரி கமலக்கே | நுதிஸி பின்னைஸிதா |
ஹிதத ஸஹோதர | இவன ரக்ஷிஸேனே
ஶ்ருதிகே ஸம்மத மத்வ | மதத ரஹஸ்யத
க்ருதிகள ரசிஸு | ப்ராக்ருத பாஷெயலீ |
ஸதத ஸ்ரவணதிந்தா | மதிமந்த ஜனரூ |
உத்க்ருத லாகுவந்ததி | கதெ சூ2த கரெத |
நங்கிதவன்னு க்ருபெயிந்த |
யதிகள மனோஹர | க்ருதி தேவீ பதி

ஶ்யாம | ஸுந்தர விட்டலா ||

விளக்கவுரை:

கிபி 1687 முதல் கிபி 1755 ஸ்ரீவிஜயதாஸரின் பொற்காலம். பாரதத்தின் உத்தர கர்னாடகாவின் ராய்ச்சூர் அருகே சீகலபரி என்னும் அஸ்வத்த ந்ருஸிம்ஹ க்ஷேத்ரம். சின்ன பதரி என்னும் பெயரும் சொல்வார்கள். வராஹ அவதாரத்தின் மகளான துங்கா நதியின் தீரத்தில் சதி சிரோமணியான கூஸம்மா என்பவரின் மகனாக பிறந்து ஸ்ரீவிஜயதாஸர் வளர்ந்தார். கூஸம்மா தன் மகனுக்கு தாஸப்பா என்று பெயரிட்டு அருமையாக வளர்த்தார். செடி வளர்வது போல தாஸப்ப வளர்ந்தார். கூஸம்மாவின் வீட்டில் வறுமை தாண்டவமாடிற்று. மனம் தளராமல், அதை சகித்துக் கொண்டு நாட்களை கழித்த தாஸப்பா இரண்டு தடவை காசிக்கு வருகிறார்.

தேவலோகத்திலிருந்து வந்த புனித கங்கையில் நீராடி, நாராயணனின் நாமத்தை நினைத்துவரும் நாளில் ஒரு நாள், ஸ்வப்னத்தில் ஸ்ரீஹரியே ஸ்ரீபுரந்தரதாஸரின் ரூபத்தில் வந்து தாஸப்பனை எழுப்புகிறார். கையைப் பிடித்து, கங்கையில் அக்கரையில் இருந்த வ்யாஸ காசிக்கு அழைத்துப் போகிறார். வ்யாஸ காசியில் ஸ்ரீவேதவ்யாஸரின் தரிசனம் ஆயிற்று. நாவில் 'விஜய' என்னும் பீஜாக்ஷரத்தை அவர் எழுதினார். ஸ்ரீபுரந்தரதாஸரின் ரூபத்தில் ஸ்ரீஹரியே வந்து ஆசிகள் வழங்கினார்.
இன்றிலிருந்து நீ விஜயதாஸர் என அழைக்கப்படுவாய். வேதத்திற்கு சம்மதமான மத்வ மதத்தின் கருத்துக்களை ப்ராக்ருத மொழியான கன்னடத்தில் இயற்றி ஹரிசேவை செய்வாய். பாமர மக்களும், பண்டிதர்களும் அதனை கேட்டும், பாடியும், ஸ்ரீஹரியின் அருளுக்கு பாத்திரர்கள் ஆகட்டும் - என ஆசி கூறினார். அழகான சிறிய தம்பூரா ஒன்றும் ஸ்ரீதாஸப்பனுக்கு கிடைத்தது. இன்று அந்த அழகிய தம்பூராவை சிப்பகிரி ஸ்ரீவிஜயதாஸரின் கட்டெயில் காணலாம். யதிகளின் மனதில் இருப்பவனான க்ருதிதேவியின் பதியான ப்ரத்யும்னனான ஸ்ரீஶ்யாம ஸுந்தர விட்டலன், தாஸப்பனை ஸ்ரீவிஜயதாஸர் என்னும் தாஸ ஸ்ரேஷ்டராக புகழ்பெறுமாறு அருள் செய்தார்.

5. ஆதிதாள

மௌனி ஸன்மானி ஸுக்ஞானி வர்யராத
இவர | அமானுஷ்ய க்ருதிகளு பானுவின் கிரணதந்தெ |
க்ஷோணியலி தும்பிரலு ஹீனமதி மனுஜனாத |
நானெந்து பேள்வனய்யா நீனேவே கதியெந்து |
மொரெ ஹொக்க தீனரிகெ ஶானுராக திந்தா
ஹொலிது | ப்ராணவன்னு க்ஞானவன்னு
தான வன்னு மாடிதரூ ||
வேணு தேனு பாலதுர கானன மோஹன |
ஜாணே ஜகன்னாத தாஸ ஸ்ரேணியே ஸாக்ஷிகேளு |
ஈ நுடி நிஜதெந்து மானஸ தொளகனு | மான
வில்லதெ ஸதா மாணதே இவர பாத ||
த்யானிபரிகெ பவமான ஜனக ஶ்யாம | ஸுந்தர
விட்டல பாணி பிடிது பாலிஸுவ ஸதத ||

விளக்கவுரை:

ஸ்ரீவிஜயதாஸர் ஸுக்ஞானி. நம்முடைய அக்ஞானத்தை அழித்து, நமக்கு நல்வழி காட்டுபவர். அபரோக்ஷ க்ஞானியும் கூட. ஒருவரின் ஏழு ஜன்ம வ்ருத்தாந்தங்களை சொல்ல வல்லவர். எல்லோராலும் மதிக்கப்படுபவரும், ப்ரஹ்ம க்ஞானியுமான இவருடைய அமானுஷ (மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட) க்ருதிகள் சூரியனின் கிரணங்கள் போல ப்ரகாசமானவை.

சாதாரண மனிதனான நான் என்ன சொல்வேன். தாஸரே! கதி நீங்களே என்று சரணடைந்து நிற்பவருக்கு அன்புடன், அருள் செய்பவர். க்ஞானத்தை கண்டிப்பாக வழங்குபவர். தம்முடைய ஆயுளின் சிறு பாகத்தை குல்கர்ணியின் மகனுக்கு நன்றிக்கடனாக தானம் செய்தவர்.

ஜகன்னாத தாஸருக்கு தம் ஸிஷ்யரான கோபாலதாஸர் மூலமாக 40 ஆண்டுகள் ஆயுள் தானம் செய்வித்தவர். வேணுகோபால விட்டல தாஸர் (பங்க நாமத திம்மண்ண), கோபாலதாஸர், மோஹன தாஸர் முதலான ஸிஷ்யர்களின் பெயர்களை சொல்லும்போது மிகவும் பெருமை உண்டாகிறது. வ்யாஸத்வமும், தாஸத்வமும் இரண்டிலும் தேர்ந்த சாமர்த்யசாலியான ஜகன்னாத தாஸரும் இவருடைய ஸிஷ்ய பரம்பரை அல்லவா?. அனைவரின் குருவான ஸ்ரீவிஜய தாஸரின் பெருமையும் வைபவமும் அளவிற்கு அரியது அன்றோ?.

இந்த வார்த்தைகள் என்றும் நிஜமானவை. சந்தேகமின்றி இவரது பாதங்களை எப்போதும் நினைப்பவர்களுக்கு, வாயுவின் தந்தையான ஶ்யாம ஸுந்தர விட்டலனான ஸ்ரீமன் நாராயணன், சம்சார சாகரத்திலிருந்து கைபிடித்து, நம்மை கரை ஏற்றி பரிபாலிப்பான். எப்போதும் அவன் அருள் நமக்கு கிடைக்கும்.

ஜதெ

சிப்பா சைல தொளிப்ப அப்பன பஜிஸலு
தப்பு மன்னிஸி காய்வ ஶ்யாம ஸுந்தர விட்டல ||

விளக்கவுரை

சிப்பா சைலத்தில் (சிப்பகிரி) இருக்கும் மஹனீயரும் நம் மார்க்கதரிஸியுமான ஸ்ரீவிஜயவிட்டல தாஸரை பஜித்தால், நம்முடைய குற்றங்களை மன்னித்து ஸ்ரீஹரியான ஶ்யாம ஸுந்தர விட்டலன் நம்மை அருள்வான்.

***

**ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து**

***